Registered as a Newspaper in Srilanka

விலை ரூபா: 10.00

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: எட்டு

சங்கு 07 வள்ளுவர் ஆண்டு 2037 வைகாசி 17 புதன்கிழமை (31.05.2006) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 163

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

## பயங்கரவாத அமைப்புக்களின் பட்டியலில் புலிகளை இணைத்தது ஐரோப்பிய ஒன்றியம்

தமிழீழ விடுதலைப் புலிகளை பயங்கரவாத இயக்கமாக ஐரோப்பிய ஒன்றியம் பட்டியல் படுத்தியுள்ளது.

பெல்ஜியத்தின் பிரஷேல்ஸ் நகரில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஐரோப்பிய ஒன்றிய அங்கத்துவ நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்களின் மாநாட்டில் இதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இத்தடையுடன் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளிலுள்ள விடுதலைப் புலிகளின் சொத்துக்களும் முடக்கப்பட்டுள்ளதாகவும் ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது.

அமெரிக்கா, கனடா, பிரிட்டன் மற்றும் இந்தியா என்பன விடுதலைப் புலிகளை ஏற்கனவே தடைசெய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஐரோப்பிய ஒன்றியத்தில் 25 நாடுகள் அங்கத்துவம் பெறுகின்றன. இந்நாடுகளில் விடுதலைப் புலிகள் பயணம் செய்வதனை கடந்த வருடம் (08 ஆம் பக்கம் பார்க்க)

## ஒஸ்லோவுக்குச் செல்லும் முடிவை பரிசீலனை செய்யவேண்டியுள்ளது

### தமிழீழ விடுதலைப் புலிகள் தெரிவிப்பு

ஒஸ்லோவில் நடைபெறவுள்ள கண்காணிப்புக்குழு பிரதிநிதிகள் கலந்துகொள்ளும் மாநாட்டில் பங்கேற்பது குறித்து பரிசீலிக்கவேண்டியுள்ளதாக விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

எதிர்வரும் 8 ஆம், 9 ஆம் திகதிகளில் ஒஸ்லோவில் நடைபெறவுள்ள கண்காணிப்புப் பிரதிநிதிகள் கலந்துகொள்ளும் மாநாட்டில் கலந்துகொள்வதாக விடுதலைப் புலிகள் தெரிவித்திருந்தனர்.


அதற்கான பூர்வாங்க ஏற்பாடுகளையும் அவர்கள் மேற்கொண்டுவந்தனர். இந்நிலையில் ஐரோப்பிய ஒன்றியம் புலிகள் மீது தடைவிதித்ததையடுத்து அக்கூட்டத்தில் கலந்துகொள்ளமுடியாதநிலை ஏற்பட்டுள்ளதாக விடுதலைப் (08 ஆம் பக்கம் பார்க்க)

# அரசு - புலிகள்

# வன்முறைகளை நிறுத்தாதுவிட்டால்

# சர்வதேச ஆதரவை இழக்கநேரிடும்

## உதவி வழங்கும் நாடுகள் எச்சரிக்கை



(டோக்கியோ)

**இலங்கையில் வன்முறைகளை முடிவுக்குக் கொண்டுவராவிட்டால் சர்வதேச சமூகத்தின் ஆதரவை இழக்கநேரிடும் என்று அரசாங்கம் மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள் எச்சரித்துள்ளன.**

**டோக்கியோவில் உதவிவழங்கும் நாடுகளின் இணைத்தலைமை நாடுகள் கூட்டம் நேற்று நடைபெற்றது. இக்கூட்டத்தின் முடிவில் வெளியிடப்பட்ட கூட்டறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.**

டோக்கியோவில் இலங்கையின் அபிவிருத்தி மற்றும் மறுசீரமைப்பிற்கான மாநாடு நடத்தப்பட்ட மூன்று ஆண்டுகளுக்குப் பின்னர் ஐரோப்பிய ஒன்றியம், ஜப்பான், அமெரிக்கா மற்றும் நோர்வேயை உள்ளடக்கிய இணைத் தலைமை நாடுகளின் கூட்டம் நடைபெற்றது.

இலங்கையில் வன்முறைகளை அரசாங்கமும், விடுதலைப் புலிகளும் (08 ஆம் பக்கம் பார்க்க)

## 12 சிங்கள கூலித் தொழிலாளர்கள் ஆயுததாரிகளால் சுட்டுக்கொலை!

### ஓமாடியா மடுவில் சம்பவம்

(வெலிக்கந்தை)

மட்டக்களப்பு மற்றும் பொலநறுவை மாவட்டங்களின் எல்லைப்புறக் கிராமமான ஓமாடியாமடுவில் 12 கூலித்தொழிலாளர்கள் ஆயுதக்குழுவொன்றினால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

இந்தத்தாக்குதலில் ஒருவர் காயங்களுடன் உயிர் தப்பி பொலநறுவை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நீர்ப்பாசன வாய்க்கால்களை துப்பரவுசெய்ய ஒப்பந்த அடிப்படையில் வேலைக்கு அமர்த்தப்பட்டிருந்த சிங்களத் தொழிலாளர்களான இவர்கள் நேற்று முன்தினம் மாலை 6.30 மணியளவில் தமது வேலையை முடித்துக்கொண்டு தமது இருப்பிடங்களிற்கு திரும்பிக்கொண்டிருக்கையில் இத்தாக்குதல் இடம்பெற்றதாக வெலிக்கந்தை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறிப்பிட்ட ஆயுததாரிகளால் உழவு இயந்திரம் ஒன்றும் மோட்டார் சைக்கிளொன்றும் தீவைக்கப்பட்டிருப்பதாகவும் இந்த சம்பவத்தின்போது ஒருவர் காயங்களுடன் உயிர் தப்பியதாகவும், மற்றொரு தொழிலாளி ஆயுததாரிகளிடமிருந்து தப்பித்துவிட்டதாகவும் விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமது வேலை முடித்து வழமை போன்று திரும்பிக்கொண்டிருக்கும்போது வழிமறித்த ஆயுததாரிகள் கைகளை கட்டி வரிசையாக இருக்கவைத்து தம்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாக உயிர் தப்பியவர் கூறினார்.

(08 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ், மன்னார் ஆயர்கள் ஜனாதிபதியுடன் பேச்சு

(கொழும்பு)

மோசமடைந்துவரும் வடக்கு-கிழக்கு நிலைமை குறித்து யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் மறைமாவட்ட ஆயர்கள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சந்தித்து பேசியுள்ளனர்.

நேற்று ஜனாதிபதி மாளிகையில் சந்தித்த மன்னார் மறைமாவட்ட ஆயர் வணக்கத்திற்குரிய இராயப்பு ஜோசப், யாழ்ப்பாண மாவட்ட ஆயர் வணக்கத்திற்குரிய தோமஸ் சௌந்தரநாயகம் ஆகியோர் வடக்கு-கிழக்கு கள நிலைவரம் படுபயங்கரமாக மோசமடைந்துவருவதாகவும், ஓயாத படுகொலைகளும், தொடரும் இடப்பெயர்வுகளும் மக்களை தினமும் கிலிகொள்ள வைத்துள்ளது என்றும் எடுத்துக்கூறினர்.

அப்பாவி பொதுமக்களின் படுகொலைகளை தடுக்க உடனடி நடவடிக்கை எடுக்கும்படியும், விடுதலைப் புலிகளுடனான அமைதிப் பேச்சுக்களை உடனடியாக ஆரம்பிக்கும்படியும் ஆயர்கள் ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ச-5)

## சிங்கள பொதுமக்கள் படுகொலை விடுதலைப்புலிகள் கடும் கண்டனம்

(மட்டக்களப்பு)

கிழக்கில் 12 அப்பாவி சிங்களவர் படுகொலை செய்யப்பட்டமைக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் கண்டனம் தெரிவித்துள்ளனர். இது குறித்து தமிழீழ விடுதலைப்புலிகளின் சமாதான செயலகம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

இலங்கையின் கிழக்கில் 12 அப்பாவி சிங்களப் பொதுமக்கள் படுகொலைசெய்யப்பட்டதற்கு தமிழீழ விடுதலைப்புலிகள் கண்டனம் தெரிவிக்கின்றனர். அப்பாவிப் பொதுமக்களை (08 ஆம் பக்கம் பார்க்க)

நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# கொழும்பில் கேந்திர நிலையங்களை பாதுகாக்க விசேட திட்டம் நடைமுறை

கொழும்பிலுள்ள உலக வர்த்தக மையம், வங்கிகள், நட்சத்திர ஹோட்டல்கள் மற்றும் அரச அலுவலகங்களைப் பாதுகாப்பதற்கான விசேட திட்டமொன்றை நகரப் பொலிஸார் நடைமுறைப் படுத்தியுள்ளனர் எனத் தெரிகிறது.

புலிகள் அமைப்பின் தாக்குதல்கள் அதிகரித்து வருவதால் தலை நகரின் மையப் பகுதியின் கேந்திர நிலையங்களுக்கு விசேட பாதுகாப்பு வழங்குவதே இப் பாதுகாப்பு வியூகத்தின் நோக்கமென பொலிஸ் அதிகாரி யொருவர் தெரிவித்துள்ளார்.

இப் பாதுகாப்பு வியூகத்தின் கீழ் 39 மாடிகளைக் கொண்ட உலக வர்த்தகமையப் பகுதிக்குள் வாகனங்கள் உட்புகுவது முற்றாகத் தடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் கோட்டை யோர்க் வீதியும் வங்கி மாவத்தையும் தற்காலிகமாக நேற்று முன்தினம் முதல் மூடப்பட்டுள்ளது.

கொழும்புநகரில்தற்கொலைத் தாக்குதல்களும் குண்டுத் தாக்குதல்களும் இடம் பெறுவதைத் தவிர்க்கும் வகையில் இவ்வாறான பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அந்தப் பொலிஸ் அதிகாரி மேலும் தெரிவித்தார். (து)

# வெற்றிடங்களை நிரப்பக் கோரிக்கை

(கொழும்பு)

வடக்கு கிழக்கு மாகாணத்தில் உள்ள அரச திணைக்களங்களில் வெற்றிடமாகியுள்ள விவசாயப் போதனாசிரியர், குடியேற்ற உத்தியோகஸ்தர் , கால்நடை அபிவிருத்திப் போதனாசிரியர் ஆகிய பதவி வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்குமாறு டிப்ளோமா பட்டதாரிகள் வடக்கு கிழக்கு மாகாண ஆளுநரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வடக்கு கிழக்கு மாகாணத்தின் சகல மாவட்டங்களிலும் மேற்படி பதவிகளுக்கு வெற்றிடம் நிலவுகின்றன.

இதனால் மிருக வைத்திய நிலையம், விவசாயப் போதனாசரியர் அலுவலகம், பிரதேச செயலர் பிரிவு என்பவற்றில் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் இல்லாது இருக்கின்றனர்.

இதனால் ஒருவர் இரண்டு மூன்று நிலையங்களில் கடமை புரிய வேண்டியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (து)

## அலங்கார உற்சவம்

யாழ்ப்பாணம் நீராவி வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்த அலங்கார மகோற்சவம் இன்று புதன்கிழமை சங்காபிஷேசத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து நாட்கள் நடைபெறும். (க)

# அதிபர்களின் கவனத்திற்கு

(சாவகச்சேரி)

தரம் 11 மாணவர்களுக்கான விஞ்ஞான பாடசெயற்திட்ட மதீப்பீட்டுப் பரிட்சை எதிர்வரும் 4-ம் திகதி காலை நடைபெறவுள்ளது என்றும் பாடசாலை அதிபர்களை நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு வலயக் கல்வி அலுவலகத்திற்கு வந்து வினாத்தாள்களைப் பெற்றுக் கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேத நாயகம் அறிவித்துள்ளார்.

இப் பரீட்சை கடந்த வாரம் நடைபெறவிருந்து பின்னர் பிற்போடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (க-29)

# ஐரோ.ஒன்றியத்தின் தடையால் சமாதான முயற்சிகள் பாதிக்காதாம்

(கொழும்பு)

ஐரோப்பிய ஒன்றியம் தமிழீழ விடுதலைப்புலிகள் பயங்கரவாத இயக்கங்களின்பட்டியலில்இணைத்துக்கொண்டமை சமாதான நடவடிக்கைகளை எந்தவகையிலும் பாதிக்காது என்று ஜனாதிபதி செயலகம் நேற்று விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் தடையானது தமிழீழ விடுதலைப்புலிகளால் மேற்கொள்ளப்படும் பொது மக்கள் மீதான கொலைகள், படையினர் மீதான தாக்குதல்கள் போன்றவற்றுக்கு கிடைத்த பதில் எனவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன் மூலம் ஐரோப்பிய ஒன்றியம் தமிழீழ விடுதலைப்புலிகளை பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ளுமாறு தெளிவான செய்தியை அனுப்பியுள்ளது என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இதேவேளை விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்த அரசு என்றும் தயாராகவேயுள்ளது அத்துடன் ஜெனீவாப் பேச்சுவார்த்தையின் போது இணக்கம் காணப்பட்ட விடயங்களை நடைமுறைப்படுத்துவதற்கும் அரச நடவடிக்கை எடுத்துள்ளது.

அரசைப் பொறுத்த வரையில் இராணுவ ரீதியிலான தீர்வை விரும்பவில்லை. பேச்சு மூலமே தீர்வு காணவிரும்புகிறது. அத்துடன் சர்வதேச சமூகத்தினால் விடுதலைப்புலிகள் மீது விதிக்கப்படும் தடையானது யுத்தத்தை நோக்கி இட்டுச்செல்லும் என்பதில் எந்த விதமான உண்மையும் இல்லை.

ஐரோப்பிய ஒன்றியத்தின் இந்த தடையானது விடுதலைப் புலிகளை ஜனநாயக ரீதியான அரசியலுக்கு உந்துதலை ஏற்படுத்தும் நடவடிக்கையாகும் என ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (க)

# வி.டி.ஜெயரட்ண சிங்கம் வெற்றிக்கிண்ணப்போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்.சென்றல் விளையாட்டுக்கழகத்தினால் நடாத்தப்பட்டு வரும் மேற்படி சுற்றுப்போட்டி தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளது.

மேற்படி சுற்றுப்போட்டியின் அரையிறுதிப் போட்டி எதிர்வரும் 4.6.2006 ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்.இப் போட்டியில் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழத்தை எதிர்த்து பற்றீசியன் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

இப் போட்டி யாழ்.இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும். இப்போட்டியில் வெற்றி பெறும் அணி 11.06.2006 அன்று மானிப்பாய் பரிஸ் விளையாட்டுக்கழக அணியுடன் இறுதிப் போட்டியில் கலந்து கொள்ளும் என போட்டிக்குழுவின் செயலாளர் அறிவித்துள்ளார்.(து)

## இராசிபலன்

31.05.2006

(வைகாசி 17 புதன்கிழமை)

சதுர்த்திமுற்பகல் 11.26 மணிவரை

புனர்பூசம் முற்பகல் 10.47 மணிவரை

இராகுகாலம் 11.52-1.22மணிவரை

சுபநேரம் 4.22-5.52 மணிவரை

| | |
|---|---|
| மேடம் | ரோகபயம், கல்வியில் ஆர்வம், நல்ல செய்தி, காரிய தாமதம். |
| இடபம் | பிரயாண நன்மை, சகோதரர் உதவி, பொருள் சோர்க்கை, முயற்சி கைகூடும் . |
| மிதுனம் | கடினவார்த்தை, காரிய தாமதம், தன விரயம், குடும்பக்கவலை. |
| கடகம் | பெரியோர் ஆதரவு, தேகநலன், சயன சுகம், தொழில்நன்மை. |
| சிங்கம் | சயன சுகக் குறைவு, புதிய திருப்பம், பொருள் விரயம், காரிய அலைச்சல். |
| கன்னி | இஷ்ட சித்தி, மனமகிழ்ச்சி, புகழ், உறவினர் சந்திப்பு. |
| துலாம் | தொழில் நன்மை, நிலை மாற்றம், அதிகாரம், அதிக பிரயாசை. |
| விருச்சிகம் | ஆரோக்கியக் குறைவு, பிரயாணம், பொருள விரயம், காரிய தாமதம் , |
| தனுசு | நண்பர்கள் வெறுப்பு, எடுத்த கருமங்கள் தாமதமாகும், பிரயாணபயம், மனச சோர்வு |
| மகரம் | சௌக்கிய விருத்தி, நண்பர்கள் சந்திப்பு, முயற்சி கைகூடும, ,பொருள்சோர்க்கை. |
| கும்பம் | மனமகிழச்சி, தேகநலன், தடைப்பட்ட காரியம்கைகூடும, சத்துருஜெயம , |
| மீனம் | தாழ்ந்த சுபாவம், சிறு வியாதி, வியாபார நன்மை, முயற்சி தாமதம். |

- வளவன்

## கட்டாக்காலி நாய்களால் தொல்லை

(ஊர்காவற்றுறை )

ஊர்காவற்றுறை பிரதேசத்தில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக பொதுமக்கள் விசனம்தெரிவிக்கின்றனர்.

அப்பகுதியில் திரியும் கட்டாக்காலி நாய்கள் வயல் மற்றும்வெற்றுக் காணிகளில் கட்டப்பட்டிருக்கும் கால் நடைகளைகடித்துக் குதறுவதாக மக்கள் கூறுகின்றனர். (க-72)

## முட்டை விலை வீழ்ச்சி

(ஊர்காவற்றுறை)

தீவகம் வடக்கு ஊர்காவற்றுறைப்பகுதியில் முட்டையின் விலை வீழ்ச்சியடைந்துள்ளது. இங்குள்ள வர்த்தக நிலையங்களில் முட்டை ஒன்று ஆறு ரூபாவாக விற்கப்படுகின்றது.

இதற்கிடையில்யாழ்ப்பாணத்தில் இருந்து வருவோர் தீவகத்திலிருந்து பெருமளவில் முட்டைகளைக் கொள்வனவு செய்து முட்டை ஒன்றை 10 ரூபாவாக விற்பனை செய்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றது. (க-72)

## பணிமனையில் நிறுத்துமாறு அறிவிப்பு

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை இல. 777 பாதையால் செல்லும் சகல வாகனங்களையும் ஊர்காவற்றுறை சிற்றுார்திச்சங்க பணிமனைக்கு முன்னால் நிறுத்துமாறு சங்கத்தலைவர் வி.ஞானசம்பந்தர் சகல வாகன சாரதிகளையும் கேட்டுள்ளார். (க-72)

## பங்கீட்டு அட்டைக்கு 2லீற்றர் மண்ணெண்ணெய்

ஊர்காவற்றுறையில் நிலவும்எரிபொருள் தட்டுப்பாட்டால் பல நோக்குக் கூட்டுறவுச் சங்க எரிபொருள் நிலையத்தில் குடும்ப பங்கீட்டு அட்டைக்கு 2 லீற்றர் மண்ணெண்ணெய்விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

இதற்கிடையில் வர்த்தக நிலையங்களில் கூடிய விலையில் தாராளமாக மண்ணெண்ணெய் விற்கப்படுவது குறிப்பிடத்தக்கதாகும் . (க-72)

## சதாசகாய அன்னை திருவிழா

இளவாலை சகாயபுரம் புனித சதாசகாய அன்னையின் ஆலய வருடாந்த திருவிழா கடந்த ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன.

எதிர்வரும் 3 ஆம் திகதி சனிக்கிழமை காலை 7 மணிக்கு நடைபெறும் திருவிழா திருப்பலியுடனும் அன்னையின் ஆசிருடனும் திருவிழா நிறைவு பெறும் (க72)

ஐரோ.ஒன்றிய அறிவிப்பின் பின்னர்

# க.கா.குழுவின் கூட்டத்திற்கு விடுதலைப்புலிகள் செல்வார்களா?

விடுதலைப்புலிகளை பயங்கரவாத இயக்கங்களின் பட்டியலில் இணைத்து அவர்கள் மீது தடைவிதித்துள்ளதாக ஐரோப்பிய ஒன்றியம் அறிவித்துள்ளதை அடுத்துத தமிழீழ விடுதலைப் புலிகள் ஒஸ்லோவில் நடைபெறவிருக்கும் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் கூட்டத்திற்கு செல்வது என்ற தீர்மானத்தை மீள் பரிசீலனை செய்து வருவதாக தெரியவருகின்றது.

ஒஸ்லோவில் இடம்பெறவிருக்கும் கண்காணிப்புக்குழுவின் கூட்டத்தில் தாம் பங்குகொள்ளவுள்ளதாக தமிழீழ விடுதலைப் புலிகள் நேற்று முன்தினம் அறிவித்திருந்தனர். இந்த நிலையிலேயே ஐரோப்பிய ஒன்றியத்தின் தடை அறிவிப்பு நேற்று அதிகாலை உத்தியோக பூர்வமாக வெளியிடப்பட்டது. இதனையடுத்து தமிழீழ விடுதலைப்புலிகள் ஒஸ்லோவுக்கு செல்வதை மீள் பரிசீலனை செய்வதாக கூறப்படுகின்றது.

இதேவேளை ஐரோப்பிய ஒன்றியத்தின் தடை அறிவிப்பு தமிழ் மக்களை பெரும் அச்சம் கொள்ளச் செய்துள்ளது என அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டுகின்றனர். மீண்டும்போர் ஏற்படுமா? பேச்சுவார்த்தைக்கு விடுதலைப் புலிகள் செல்வார்களா? பேச்சுவார்த்தை மூலம் தமிழர்களின் பிரச்சினைக்குதீர்வு காணப்படுமா? என்ற வினாக்கள் மக்களை குழப்பத்தில் ஆழ்த்தியுள்ளது என்றும் அரசியல் அவதானிகள் சுட்டிக் காட்டுகின்றார்கள். (க)

## தீவகத்தில் பாதுகாப்பு அதிகரிப்பு

தீவகம் வடக்கு ஊர்காவற்றுறைப்பகுதியிலும் மற்றும் தீவகத்தின் ஏனைய பகுதிகளிலும் கடற்படையினரின் பாதுகாப்பு அதிகரித்துள்ளது.

துறைமுக வீதிச்சந்தியிலும் , ஊர்காவற்றுறை மேற்கு வீதி, வைத்தியசாலை வீதி ,கிழக்கு வீதி, மத்திய வீதி ஆகியவற்றிலும் ஏராளமான கடற்படையினர் காவல் புரிந்து வருகின்றனர்.

சந்தைப் பகுதி மற்றும் பஸ் தரிப்பிட நிலையப் பகுதியிலும் கடற்படையினரின் பாதுகாப்பு நடவடிக்கையால் மக்கள் நடமாட்டம் குறைவாகக் காணப்படுகின்றது. (க-72)



வலிதெற்கு பிரதேச செயலக காலாசாரப் பேரவை நடத்திய கலை இலக்கிய பெருவிழா இரண்டாம் நாள் நிகழ்வில் சுவைகள் என்ற தலைப்பில் இடம்பெற்ற கவியரங்கில் தலைமைக் கவியை கலா பூஷணம் சு.துரைசிங்கம் நிகழ்ததுவதையும் கவியரங்கில் கவிபாடிய கவிஞர்களான கு.றஜீபன், க.வேல்தஞ்சன், இயல்வாணன், பண்டிதர் இ.சுப்பிரமணியம், வே.ஜீவரூபன் ஆகியோரையும் படத்தில் கணலாம்.

# உலகெங்கும் ஒருமித்த குரலில் ஒலித்த புலம்பெயர் தமிழர்களின் உரிமை முழக்கம்

**ஒட்டாவாவில்...**



**ரொறன்ரோவில்**



கனேடியத் தலைநகர் ஒட்டாவாவில் உள்ள நாடாளுமன்றக் கட்டடத்திற்கு முன்பாகவும் ரொறன்ரோ நகரிலும் நடைபெற்ற உரிமைக் குரல் நிகழ்வு...

**நெதர்லாந்தில்...**



நெதர்லாந்தின் டென்கார்க்கில் அமைந்துள்ள பாராளுமன்ற முன்றலில்...

**இத்தாலியில்...**




இத்தாலியில் வியா கவூரில் உள்ள உள்நாட்டு அமைச்சு முன்றலில்...

**பிரான்ஸில்...**



பாரிஸில் அமைந்துள்ள வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் முன்பாக...

**அவுஸ்திரேலியாவில்...**



கன்பெராவிலுள்ள நடுவன் அரசின் நாடாளுமன்றக் கட்டடத்திற்கு முன்பாக...

**ஜேர்மனியில்...**



டுசில் டோவ் பாராளுமன்ற முன்றலில்...

**பின்லாந்தில்...**



பின்லாந்து நகரில்...

**சுவிஸில்...**



பேர்ண் நகரில் அமைந்துள்ள சுவிஸ் நாடாளுமன்ற முன்றலில்...

**நியூஸிலாந்தில்...**




நியூஸிலாந்து நகர ஓட்டோ சதுக்கத்தில்..

**நோர்வேயில்...**




நோர்வே தலைநகர் ஒஸ்லோவிலுள்ள வெளியுறவு அமைச்சு முன்றலில்...

**டென்மார்க்...**



டென்மார்க் தலைநகர் கொப்பன் கேகனில்...

# இன்று ஒரு தகவல்

## நடப்பது நடக்கட்டும்

ஒரு ஊரில் ஒருவன் இருந்தான். சாதாரண ஆள் தான். குதிரை வண்டி ஓடிக்கொண்டிருந்தான். எலும்பும் தோலுமாக ஒரு குதிரை. ஓட்டையும் உடைசலுமாக ஒரு வண்டில் இது தான் அவனது சொத்து. இதை வைத்தே அவன் காலம் தள்ளிக்கொண்டிருந்தான் .

ஒரு நாள் அவன் அந்த வண்டிலில் எங்கேயோ போய் விட்டுத் திரும்பி வந்து கொண்டிருந்தான் . அப்போது அந்தக் குதிரை ஒரு இடத்தில் கால் தடுமாறிக் கீழே விழுந்துவிட்டது. கால் முறிந்து விட்டது. ஊரில் உள்ளவர்கள் எல்லோரும் அவனைப் பார்தது இரக்கப்பட்டார்கள் . "ஐயோ பாவம்... இப்படி ஆகிவிட்டதே , இனிமேல் எப்படித்தான் பிழைப்பு நடத்தப் போகிறாயோ என்று கூறிப் பரிதாபப்பட்டார்கள்.

ஆனால் இவனோ கொஞ்சம் கூட பதற்றப்படவில்லை... நடப்பது நடக்கட்டும்..! பார்க்கலாம் என்று கூறிவிட்டு அவன்பாட்டுக்கு போய்விட்டான். கிராமத்து மக்களுக்கு மிகவும் ஆச்சரியம். இவனுடை அமைதி, நிதானம், அலட்டிக்கொள்ளதா தன்மை இது தான் அவர்களுடைய ஆச்சரியத்துக்குக் காரணம்.

அவர்கள் காட்டுக்குப் போய் புதிதாக ஒரு குதிரையைப் பிடித்துக்கொண்டு வந்து அவனிடம்பரிசாக கொடுததுவிட்டார்கள். இதைப்பார்த்த வேறு சிலர் என்ன சொன்னார்கள் தெரியுமா? நீ கொடுத்து வைத்தவன்... மோசமான குதிரைக்குப்பதிலாக நல்ல குதிரையே உனககுக் கிடைத்து விட்டதே என்றார்கள். இப் போதும அவன அலட்டிக்கொள்ளவில்லை. "நடப்பது நடக்கட்டும்... பார்க்கலாம் என்று கூறிவிட்டு பேசாமல் போய் விடடான்.

கொஞ்சநாள் போனதும் என்ன நடந்தது தெரியுமா? காட்டிலிருந்து பிடித்துக் கொண்டு வந்த குதிரை ஒரு நாள் காட்டுக்கே ஓடிப்போய்விட்டது. ஐயோ பாவம்... நாம்கொடுத்த குதிரையும் அவனை விட்டு விட்டுப் போய்விட்டதே " என்று மக்கள் பரிதாபப்பட்டார்கள். இப்போதும் அந்த ஆள் பொறுமையாக நடப்பது நடக்கட்டும் பார்க்கலாம் என்று கூறிவிட்டான்.

மறுபடியும் கொஞ்ச நாள் ஆனது ஓடிப்போன குதிரை இன்னும் ஐந்தாறு குதிரைகளையும் சேர்த்துக் கொணடு திரும்பி வந்தது. ஊர்மக்கள் "நீகொடுத்து வைத்தவன்... ஐந்தாறு குதிரை சேர்ந்து கிடைத்து விட்டதே உனக்கு என்றார்கள் . இப்போதும் அந்த ஆள் பதற்றப்படவில்லை வழக்கமாக சொன்னது போலவே சொன்னான்.

அதன் பின் ஒருநாள் அந்த வண்டில்காரனின் ஒரே மகன் அந்த ஐந்தாறு குதிரைகளையும் நன்கு கவனித்துக் கொண்டிருந்தான். வண்டிலில் பூட்டுவதற்கு பழகிக் கொண்டிருந்தபோது ஒரு முரட்டுக்குதிரை கொடுத்த உதையில் அவனது கால் முறிந்து விட்டது. ஐயோ உன் பிள்ளைக்கு இப்படி ஆகிவிட்டதே என்று ஊர்மக்கள் பரிதாபப்பட்டார்கள் அப்போதும் இவன நடப்பது நடக்கட்டும் என்று கூறிவிட்டு மகனைக் கவனித்துக் கொண்டிருந்தான்.

அதன் பின் திடீரென்று ஒருநாள் அந்த தேசத்தில் போர். அடுத்த தேசத்திலிருந்து படையெடுத்துக் கொண்டு வந்து விட்டார்கள். 'வீட்டுக்கு ஒருவன் வர வேண்டும் சண்டைபோடுவதற்கு' என்று உத்தரவிட்டார் ராஜா. வண்டிக்காரன் மகனுக்கு கால் ஒடிந்தாதனால் சண்டைக்குப்போக வேண்டிய அவசியமில்லாமல் போய்விட்டது. அவனுக்கும் வயதாகிவிட்டதால் போக வேண்டிய கட்டாயமில்லை. இப்போதும் அவனைப்பார்த்து " நீ மிகவும் கொடுத்து வைத்தவன் என்றார்களாம். இவனும் வழக்கம் போலவே நடப்பது நடக்கட்டும் பார்க்கலாம் என்று கூறிக்கொண்டு அவனது வேலையைப் பார்த்துக் கொண்டிருந்தானாம்.

இது ஒரு கதை வீட்டில் தாத்தா பாட்டி கூறும கதை. கதை ஒரு மாதிரி தெரிந்தாலும் இதிலிருந்து நாம் தெரிந்துகொள்ள வேண்டிய ஒரு கருத்து வாழ்வில் சுக துககங்களை நாம் சமமாக பார்க்க பழகிக்கொள்ள வேண்டும் என்பது தான்.நடப்பது நடக்கட்டும் என்று சொல்லிக்கொண்டு நாம் பேசமால் படுத்து உறங்கலாம் என்று அர்த்தம் கொள்ளக்கூடாது.

ஒரு குதிரைப் பந்தயம் நடந்து கொண்டிருந்தது. ஒருவன் ஒரு குதிரை மீது பணம் கட்டினான்.அது கெயிககவில்லை. பக்கத்தில் இருந்தவர் சொன்னாராம் நீ பணம் கட்டினாயே... அந்தக் குதிரை இல்லை அது பாடடுக்கு நடந்து போகிறது பார் என்றாராம். அதற்கு இவன் " நடப்பது நடக்கட்டும் " என்றானாம்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# தமிழீழ விடுதலைப்புலிகள் புதிதாக கண்ணிவெடிகளை புதைக்கவில்லை

## அபி.அமைச்சுப் பிரிவின் செயலாளர் ஜெயசிங்க

(கொழும்பு)

வடக்கு–கிழக்கில் கண்ணிவெடிகளை தமிழீழ விடுதலைப்புலிகள் புதிதாக புதைக்கவில்லை என்று தேசிய கட்டமைப்பு மற்றும் அபிவிருத்தி அமைச்சுப் பிரிவு செயலாளர் எம்.எஸ்.ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

வடக்கு–கிழக்கு அபிவிருத்தி பணிகள் குறித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் கருத்துக்கூறுகை யில்,

'கடந்த இரு மாதங்களாக அதிகரித்துவரும் வன்முறைகளால் புனர்வாழ்வுப் பணிகள் பாதிக்கப்பட்டுள்ளன. அதி உயர் பாதுகாப்பு வலயப் பகுதிகளில் மக்களை மீளக் குடியமர்த்துவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. திருகோணமலை மற்றும் யாழ்ப்பாணத்தில் நாம் சில பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகிறோம். இருப்பினும் அனுமதிக்கப்பட்ட அனைத்து செயற் திட்டங்களும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

உதவி வழங்கும் அமைப்புகள், வங்கி மற்றும் திறைசேரியூடாக உரிய நிதியும்கிடைக்கப்பெற்று வருகிறது. தமிழீழ விடுதலைப்புலிகளும் இலங்கை அரசாங்கமும் அமைதித் தீர்வு ஒன்றை காணும்வரையில் இந்தப் பணிகள் பாதிக்கும். 31ஆயிரம் வீடுகளை கட் டுவதற்காக 9 ஆயிரத்து 21 மில்லியன் ரூபா செல விட்டுள்ளோம். மேலும் 29 திட்டங்களுக்காக 57 மில் லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. 13 மாவட் டங்களில் வீடமைப்பு மற்றும் வாழ்வாதார உள்கட்டமைப்புக்க ளுக்கான திட்டங்கள் இவை.

வெளிநாட்டு நிதி உதவிகள் கிடைக்கின்ற போதும் இலங்கையின் திறைசேரி ஆயிரத்து 657மில்லியன் ரூபா வழங்க உள்ளது. அதி உயர் பாதுகாப்பு வலயப் பகுதியில் 18ஆயிரத்து 633குடும்பத்தினரை மீளக் குடியமர்த்தும் பணி தாமதமடைந்துள்ளது. படைத் தரப்பினருக்கு அந்த நிலங்கள் தேவைப்படுவதால் தாமதமடைகிறது.

அதி உயர் பாதுகாப்பு வலயத்தால் வெளியேறிய மக்கள் கிளிநொச்சி மற்றும் வவுனியாவில் வசிக்கின்றனர். கண்ணிவெடி அகற்றல் பணியும் தொடர்கிறது. இருப்பினும் தமிழீழ விடுதலைப்புலிகள் தரப்பில் புதிய கண்ணிவெடிகள் ஏதும் புதைக்கப்படவில்லை. மொத்தம் 5 இலட்சம் கண்ணிவெடிகள் இன்னும் அகற்றப்படவேண்டியுள்ளது என்றார். (க)

## வீரவேங்கை ஜெகமோகனின் வித்துடல் விதைக்கப்பட்டது

கடந்த 27ஆம் திகதி மன்னார் பரப்புக்கடந்தான் பகுதியில் ஆழ ஊடுருவும் படையினருடனான மோதலில் வீரச்சாவடைந்த தமிழீழத் தேசியத் துணைப்படை வீரர் வீரவேங்கை ஜெகமோகனின் வித்துடல் நேற்று முன்தினம் மன்னார் பண்டிவிரிச்சான் மாவீரர் துயிலும் இல்லத்தில் விதைக்கப்பட்டது.

முன்னதாக அவரது வீட்டில் வைக்கப்பட்டிருந்த வித்துடல் பெரியபண்டிவிரிச்சான் பொதுநோக்கு மண்டபத்தில் மக்கள் வணக்கத்துக்காக வைக்கப்பட்டது. அங்கு நடைபெற்ற வணக்க நிகழ்வில் மன்னார் தேசிய துணைப்படையின் துணைத் தளபதி ஜெயக்காந்தன், மன்னார் ஊரக வளர்ச்சி பணிப் பொறுப்பாளர் தென்றல் மாறன், மன்னார் மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இனியவன் உட்பட பொதுமக்கள் போராளிகள் என பலர் கலந்துகொண்டு இறுதி வணக்கம் செலுத்தினர்.

பின்னர் அலங்கரிக்கப்பட்ட ஊர்தியில் எடுத்துச் செல்லப்பட்ட வித்துடல் பண்டிவிரிச்சான் மாவீரர் துயிலும் இல்லத்தில் விதைக்கப்பட்டது. (க)

## கலந்துரையாடல்

தென்மராட்சி பாடசாலைகளில் நடைப்முறைப் படுத்தப்படும் விஞ்ஞான மற்றும் கணித பாட செயற்றிட்டம் தொடர்பான கலந்துரையாடல்கள் தென்மராட்சி வலய கல்வி அலுவலக மாநாட்டு மண்டபத்தில் எதிர்வரும் 3 ஆம் 4 ஆம் திகதிகளில் மு.ப 9 மணிக்கு நடைபெறவுள்ளன.

3 ஆம்திகதி விஞ்ஞான பாட செயற்திட்டம் தொடர்பான கலந்துரையாடலும் மறுநாள் 4 ஆம் திகதி கணிதபாட செயற்திட்டம் தொடர்பான கலந்துரை யாடலும் இடம்பெறும்.

எனவே குறித்த பாட செயற்திட்டங்களுக்கு பொறுப்பான ஆசிரியர்களை குறித்த தினங்களில் தவறாது கலந்து கொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளது. (க–29)

## கையெழுத்து மனு

ஆசியாவில் துப்பாக்கிகள் மற்றும்சிறியஆயுத பாவனைகளுக்கு எதிரான வலையமைப்பின் இலங்கைக் கிளையினரால் சட்டவிரோத ஆயுதப்பாவனை தொடர்பில் பெறப்பட்ட கையெழுத்து மனு தலைமை அமைப்பிடம் கையளிக்கப்படவுள்ளது.

சட்ட விரோத ஆயுதங்களுக்கு எதிராக11 ஆயிரத்து 725 கையெழுத்துக்கள் பெறப்பட்டுள்ளதாக அமைப்பின் இலங்கைகிளைத்தலைவர் ஹின்ஸ்லி றொற்றிக்கோ தெரிவித்துள்ளார்.

இந்த கையெழுத்துப் பெறும் நடவடிக்கை 2003 ஆம் ஆண்டுசர்வதேச ரீதியில் ஆரம்பிக்கப்பட்டது. சட்டவிரோத ஆயுதங்களுக்குஎதிராக உலகலாவிய ரீதியில் ஒரு மில்லியன் மக்களின் கையொழுத்துக்களை பெறு வதே தமது அமைப்பின் நோக்க மென்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (க–9)

## உண்ணாவிரதத்தில் குதிக்க தொண்டர் ஆசிரியர்கள் முஸ்தீபு

நிரந்தர நியமனம் கிடைக்கும் வரை வடக்கு கிழக்கிலுள்ள கல்வி வலயங்களை முடக்கி தொடர்ச்சியாக உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்துவதற்கு கிழக்கு மாகாண தொண்டர் ஆசிரியர் சங்கம் தீர்மானித்துள்ளது. சங்கத்தின் தலைவர் இது குறித்துகருத்துத்தெரிவிக்கையில்,

பல போராட்டங்கள் நடத்தியும் தமது பிரச்சினைகளை தீர்ப்பதில் இது வரை உரிய அதிகாரிகள் கரிசனை காட்டுவதற்கு தவறிவிட்டதாக குறிப்பிட்டுள்ளார். (க–9)

## அடிக்கடி இடம்பெறும் மின்வெட்டு

(சில்லாலை)

பண்டத்தரிப்பு, சில்லாலை, வடலியடைப்பு, சண்டிலிப்பாய், மாதகல் ஆகிய பகுதிகளில் தினமும் மின்வெட்டு அமுல்படுத்தப்பட்டு வருவதாகவும் இதனால் அப்பகுதியில் மக்கள் பெரும் சிரமங்களுக்குள்ளாவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

பகல் நேரங்களில் அடிக்கடி ஏற்படும் மின் தடை காரணமாகமின்சார உபகரணங்கள் பழுதடைவதாகவும் இரவு நேரங்களில் மின்தடைப்படுவதால் மாணவர்களின் கல்வி பாதிப்படைவதாகவும் கூறப்படுகின்றது.

முன்அறிவிப்பு இன்றி அமுல்படுத்தப்படும் மின் வெட்டினால் தாம் எதிர்நோக்கும் சிரமங்கள் குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவித்தும் இது வரை அவர்கள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (க–58)

## மயான பூமியாக காட்சிதரும் அல்லைப்பிட்டிக் கிராமம்

(ஊர்காவற்றுறை)

தீவகத்தின் நுழைவாயிலான அல்லைப்பிட்டிக் கிராமம் மக்கள் நடமாட்டம் இன்றி மயான பூமியாக காட்சியளிக்கின்றது.

அல்லைப்பிட்டியில் கடந்த மாதம் 13 ஆம் திகதி இடம்பெற்ற படுகொலைச் சம்பவங்களை யடுத்து கிராமத்திலிருந்த மக்கள் அங்கிருந்து வெளியேறி யாழ்ப்பாணத்திற்கும் வன்னிக்கும் இடம்பெயர்ந்து சென்றுள்ளமையை யடுத்தே அந்தப்பகுதி மாயன பூமியாக காட்சியளிக்கின்றது.

இதேவேளை குறித்த கிராமத்தை விட்டு வெளியேறிய மக்கள் மீண்டும் தமது சொந்த இடங்களுக்கு திரும்ப விரும்பினால் அதற்கான சகல ஏற்பாடுகளையும் செய்து தர தாம் தயாராக இருப்பதாக யாழ்.மாவட்ட அரச அதிபர் கே.கணேஷ் மற்றும் அரச சார்பற்ற நிறுவனூங்களின் பிரதிநிதிகள் உறுதியளித்துள்ளனர்.

அல்லைப்பிட்டியல் இருந்து இடம் பெயர்ந்து யாழ். நகரில் உள்ள ஓ. எல்.ஆர் தேவாலயத்தில் தஞ்சமடைந்துள்ள மக்களை யாழ்.மாவட்ட அரச அதிபர் கே. கணேஷ் மற்றும் அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதி கள் கடந்த திங்கட்கிழமை சந்தித்து பேசிய போது இந்த உறுதியை வழங்கியிருந்தனர் (க–72)

## புதிய நிர்வாகிகள் தெரிவு

(துன்னாலை)

பருத்தித்துறை ஆதாரவைத்தியசாலையின் ஊழிய நலன்புரிச்சங்க புதிய நிர்வாகத்தெரிவு டாக்டர் எஸ் .கதிரவேற்பிள்ளை தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

புதிய ஆண்டிற்கான நிர்வாகக் குழுவில் தலைவராக வைத்திய சாலையின் பொறுப்பதிகாரி வைத்திய கலாநிதி எஸ்.கதிரவேற்பிள்ளையும், உபதலைவராக வைத்தியசாலையின் நிர்வாக உத்தியோகத்தர் எஸ்.சின்னத்தம்பியும், பொருளாளராக சிரேஷ்ட தாதி உத்தியோகத்தர் எஸ்.பத்மநாதனும், செயலாளராக இயந்திர இயக்குநர் கே. கிரிதரனும், நிர்வாக குழு உறுபினர்களாக ஆர் சதீஸ், ரி.கணபதிப்பிள்ளை, எம்.கஜமதி, எம் . எசேக்கியல் , ஆர் அகிலன், பி.செபமாலை, ஆர். முகுந்தன், பி. கஜேந்திரன், ரி. வடிவாம்பிகை, ரி . காஞ்சனா ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (க–101)

## வீதி திருத்தப்படவில்லை

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை சுருவில் சந்தியிலிருந்து வேலணை துறையூர் சந்தி வரையுமுள்ள வீதி புனரமைக்கப்படாமையினால் அங்கு செல்லும் பஸ்கள் புளியங்கூடல் வரை வந்து திரும்பி சரவணை ஊடாக வங்களாவடி மற்றும் துறையூர் சந்திவரை சென்று வருவதாகவும் அதனால் பயணிகள் பெரும் சிரமத்திற்குள்ளாகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

பல மாதகாலமாக குறித்த வீதியில் கற்கள், மண் பறிக்கப்பட்ட போதிலும் இந்த வீதி இதுவரை புனரமைக்கப்படவில்லை என்றும் இதனால் பயணிகள் மிகவும் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (சு-72)

## கற்றல் நடவடிக்கைகள் இன்று ஆரம்பமாகும்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் 11ஆம் தர மாணவர்களுக்கான கற்றல் நடவடிக்கைகள் இன்று புதன்கிழமை முதல் ஆரம்பிக்கப்படவுள்ளதாக கல்லூரி அதிபர் ஆர்.தெய்வேந்திர ராஜா அறிவித்துள்ளார்.

வகுப்புகள் தினமும் காலை 8மணி முதல் 12.30 மணிவரை நடைபெறுமெனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (சு-52)

## மாநாடு

நிகழ்கால அரசியல் நிலைமை குறித்து மக்களுக்கு விளக்கமளிக்கும் நோக்கில் மாபெரும் மாநாடு ஒன்று இன்று 2.30 மணிக்கு பண்டார நாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த மாநாட்டுக்கான ஏற்பாடுகளை தேசிய பிக்கு முன்னணி செய்துள்ளது. அனைத்து பேதங்களையும் மறந்து ஒரு தாயின் பிள்ளைகள் என்பதை கருத்தில் கொண்டு அனைவரும் இம்மாநாட்டில் கலந்துகொள்ள வேண்டுமென்று தேசிய பிக்கு முன்னணி வேண்டுகோள் விடுத்துள்ளது. (சு-9)

## கட்டட நிர்மாணப் பணிகளில் ஈடுபடுவோர் தொழிலின்றி அவதி

வடக்குக்கு கட்டடப் பொருட்கள் எடுத்துவர பாதுகாப்பு அமைச்சு விதித்துள்ள தற்காலிகத் தடையை அடுத்து, கட்டட நிர்மாணப் பணிகள் ஸ்தம்பிதமடைந்துள்ளதுடன் சல்லிக்கல், கண்டகல் போன்ற கற்களின் விலைவீழ்ச்சி அடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பாக வடமராட்சி கிழக்குப் பகுதியில் தாராளமாக இக் கற்களைப்பெறலாம் என்றும் மிகக் குறைந்த விலையில் விற்கப்படுவதாகவும் கூறப்படுகின்றது.

இது இவ்வாறிருக்க, கட்டடப் பொருட்களை வடக்குக்கு எடுத்துவர பாதுகாப்பு அமைச்சு தடை விதித்துள்ளதையடுத்து, கட்டட நிர்மாணப் பணிகளை மேற்கொள்ளும் மேசன் தொழிலாளர்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்.

வறுமையின் நிமித்தம் காரணமாக இத்தொழிலில் ஈடுபடுபவர்கள் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்கி வருகின்றனர். தொழில் இல்லாது அலைகின்றனர். இவர்களது குடும்பங்கள் பட்டினியால் வாடும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன. (சு-101)

## அகதிகள் பயணம் குறித்து ஐ.நா அமைப்பு கவலை

(கொழும்பு)

இலங்கையிலிருந்து தமிழ் நாட்டுக்கு ஈழத் தமிழர்கள் படகுகளில் அகதிகளாக செல்வது குறித்து ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகள் ஆணையம் (UNHCR) ஆழ்ந்த கவலை தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில்,

இலங்கை வன்முறைகளால் அகதிகளாக பலரும் பாரிய ஆபத்துகளுக்கு முகம்கொடுத்த நிலையில் படகுகள் மூலம் வெளியேறி வருகின்றனர். இப்படி படகுகளில் நிறைய எண்ணிக்கையிலானோரை ஏற்றிச்செல்வதால் மூழ்கும் நிலையும் ஏற்பட்டு விடுகிறது. கடந்த மே 19ஆம் திகதி முதல் இத்தகைய சம்பவங்கள் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

அகதிகளாகச் செல்லவும் அடைக்கலம் கோரவும் ஒவ்வொருவருக்கும் உரிமை உண்டு. இதுதொடர்பில் உரிய தரப்பினர்களுடன் இணைந்து செயற்பட உள்ளோம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (சு)

## புனித அந்தோனியார் திருவிழா

ஊர்காவற்றுறை கிழக்கு வீதி புனித – அந்தோனியார் ஆலய வருடாந்த திருவிழா எதிர்வரும் 4ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தினமும் ஆயத்த வழிபாடுகள் நடைபெற்று எதிர்வரும் 13ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை திருநாள் திருப்பலியும் தொடர்ந்து திருச்சொரூப பவனியும் இடம்பெறும். (சு-72)

## மஹிந்த ராஜபக்ஷ விரும்பினால் ஒப்பந்தத்தை இரத்து செய்யலாம்

### ஜே.வி.பிக்கு ஐ.தே.க பதில்

(கொழும்பு)

யுத்த நிறுத்த ஒப்பந்தம் மூலம் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு இறைமை அளிக்கப்பட்டிப்பதாகக் கூறுவீர்களேயானால் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அந்த ஒப்பந்தத்தை உத்தியோகபூர்வமாக இரத்துச் செய்யப்பட்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

விடுதலைப் புலிகளின் கடல் இறைமை குறித்து ஐக்கிய தேசியக் கட்சியின் நிலைப்பாடு என்ன என்று கேள்வி எழுப்பி ஐ.தே.கவுக்கு அக்கட்சியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா கடிதம் அனுப்பியிருந்தார்.

அக்கடிதத்துக்கு ஐ.தே.கவின் களுத்துறை நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன அனுப்பியுள்ள பதிலிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. அந்தக் கடிதத்தில் மேலும் இதுகுறித்து தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தமிழீழ விடுதலைப் புலிகளின் கடல் இறைமையை ஐக்கிய தேசியக் கட்சி ஒப்புக்கொள்கிறதா? என்பதை யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை பாதுகாப்பதாக ஜெனீவாவில் அரசாங்கம் ஒப்புக்கொள்ளும் முன்னர் எழுப்பியிருக்கவேண்டும்.

நேரத்துக்கு நேரம் கொள்கையை மாற்றிக் கொள்ளுகிற இரட்டை நிலைப்பாடுள்ள கட்சிதான் ஜேவிபி.

யுத்த நிறுத்த ஒப்பந்தமானது தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு இறைமை உரிமை வழங்குவதாக ஜே.வி.பி குற்றம் சாட்டுமேயானால் உத்தியோகபூர்வமாக அந்த ஒப்பந்தத்தை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இரத்துச் செய்யட்டும். (சு)

## ம.உ.ஆ.குழு அதிகாரிக்கு மிரட்டல்

## சர்வதேச ம.உ.ஆ.குழு விசாரணை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மனித உரிமைகள் ஆணைக்குழுவின் இணைப்பதிகாரி ரோகித பிரியதர்சனாவிற்கு விடுக்கப்பட்டுள்ள கொலை அச்சுறுத்தல் தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அச்சுறுத்தல் குறித்து சர்வதேச மனித உரிமைகள் ஆணைக்குழு உடனடி விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

யாழ். இணைப்பதிகாரியின் அலுவலகத்திற்கு சென்ற ஒரு நபர் கொலை அச்சுறுத்தல் விடுத்ததுடன் வெற்றுத் தோட்டா அடங்கிய கடிதம் ஒன்றையும் கையளித்திருந்தமை தெரிந்ததே.

இது தொடர்பான மற்றுமொரு விசாரணையையாழ். பொலிஸாரும் மேற்கொண்டு வருகின்றனர். (சு-5)

## ஆரோக்கிய அன்னை திருவிழா

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை கரம்பன் ஆரோக்கிய அன்னையின் வருடாந்த திருவிழா நேற்று நற்கருணை விழாவுடன் ஆரம்பமாகி இன்று புதன்கிழமை காலை 7.00 மணிக்கு திருநாள் திருப்பலியுடனும் அதனைத் தொடர்ந்து திருச்சொரூப பவனி ஆசீர் ஆகியவற்றுடனும் நிறைவு பெறும். (சு-72)

## மின்சாரமில்லை

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை முகாம் வீதிச் சந்திக்கருகாமையிலுள்ள 15 வீடுகளுக்கு இன்னமும் மின்சாரம் வழங்கப்படவில்லை என அப்பகுதி மக்கள் தெரிவித்தனர். (சு-72)


## யாழ்ப்பாணம்- மாநகரசபை

## இறைச்சிக்கடைகள் மீள்கேள்வி அறிவித்தல் - 2006

கீழ்வரும் இறைச்சிக்கடைகளுக்கு 15.06.2006ந் திகதி தொடக்கம் 31.12.2006ந் திகதி வரையான காலத்திற்கு குத்தகைக்கு வழங்குவதற்கான மீள்கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப்படிவம் வழங்கும் இறுதித் திகதி – 08.06.2006ந் திகதி வியாழக்கிழமை பி.ப12.30 மணி வரை.

கேள்விப் படிவம் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி – 08.06.2006ந் திகதி வியாழக்கிழமை பி.ப 1.00 மணி வரை.

| | | பிணைப்பணம் | ஆகக்குறைந்த கேள்வித் தொகை |
|---|---|---|---|
| 1.நரிக்குன்று மாட்டிறைச்சிக்கடை | | 5000/- | 1,00,000/- |
| 2.நாவாந்துறை " | இல.2 | 2500/- | 56,500/- |
| 3.நாவாந்துறை " | இல.4 | 2500/- | 60,000/- |
| 4.நாவாந்துறை " | இல.5 | 2500/- | 40,000/- |
| 5.நாவாந்துறை " | இல.6 | 2500/- | 25,000/- |
| 6.நாவாந்துறை " | இல.7 | 2500/- | 25,000/- |
| 7.நாவாந்துறை " | இல.8 | 2500/- | 25,000/- |
| 8.நாவாந்துறை " | இல.9 | 2500/- | 25,000/- |

மேலதிக விபரங்கள் தேவைப்படின் அலுவலக நேரத்தில் வந்து பெற்றுக்கொள்ளலாம்.

### மீள்கேள்வி அறிவித்தல் - குருநகர் சந்தைக் கடைகள்

குருநகர் சின்னக்கடையில் கீழ்மாடி உட்புறம், மேல்மாடி வெளிப்புறம், உள்புறம் அமைந்துள்ள கடைகளுக்கான கேள்வி விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

சபையினால் கேள்விப்படிவம் வழங்கும் இறுதித் திகதி – 08.06.2006ந் திகதி வியாழக்கிழமை பி.ப 12.00 மணிவரை.

கேள்விப் படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி – 08.06.2006ந் திகதி வியாழக்கிழமை பி.ப 1.30 மணிவரை.

கடைகள் பற்றிய முழு விபரங்களும், கேள்வி நடைமுறைகளும் 17.03.2006ந் திகதி உதயன், வலம்புரி பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டுள்ளது அல்லது அலுவலக நேரத்தில் நானாவித இறைவரிப் பகுதியில் வந்து பெற்றுக்கொள்ளலாம்.

சீ.வி.கே.சிவஞானம்
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
29.05.2006

c -332


## வர்த்தகர்கள் விசனம்

நெல்லியடி நகரில் வர்த்தக நிலையங்களுக்கு முன்னால் பொதுமக்களினதும் வர்த்தகர்களினதும் துவிச்சக்கர வண்டிகள் மற்றும் மோட்டார் சைக்கிள்களை நிறுத்த இராணுவத்தினர் தடை விதித்துள்ளதால் நகருக்கு வரும் பொதுமக்கள் தொகை வெகுவாக குறைந்துள்ளதாகவும் இதனால் வர்த்தகர்கள் தமக்கு வியாபாரத்தில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாகவும் விசனம் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக கிராமப்புறங்களில் இருந்து சில்லறை வியாபாரிகளும், பொதுமக்களும் பொருட்களை அதிகளவில் தினமும் கொள்வனவு செய்வது வழக்கம் எனவும், இராணுவத்தால் இவ்வாறு வருவோரின் வாகனங்களை கடைக்கு முன்னால் நிறுத்த தடை விதிப்பதாலும் கெடுபிடிகளை மேற்கொள்வதாலும் தற்போது அவர்கள் வருவதில்லை எனவும் வர்த்தகர்கள் கவலை தெரிவிக்கின்றனர். (சு-101)

## கிளைமோர்க் குண்டு மீட்பு

(காலி)

மொனராகலை வெல்லவாய வீதியில் அதிசக்தி வாய்ந்த கிளைமோர் குண்டொன்றை நேற்று தாம் மீட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

7 கிலோ கிராம் எடை கொண்ட இந்த கிளைமோர் குண்டு வெல்லவாய பாலவருவ 249 ஆவது மைல்கல் பகுதியிலிருந்து மீட்கப்பட்டுள்ளது.

கைப்பற்றப்பட்ட கிளைமோர் குண்டை குண்டு செயலிழக்கும் பிரிவினர் செயலிழக்க வைத்ததாக மொனராகல பொலிஸ் நிலையப் பரிசோதகர் தெரிவித்தார். (சு-9)

## மொழிபெயர்ப்பாளர்களை நியமிக்க நடவடிக்கை

(கொழும்பு)

அரசாங்க திணைக்களங்களில் நிலவிவரும் மொழி தொடர்பான சிக்கல் நிலையை நிவர்த்தி செய்ய தோட்ட உட்கட்டமைப்பு மற்றும் கால்நடை வளங்கள் அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்கமைய அரசாங்க திணைக்களங்களில் 2 ஆயிரத்து 700 மொழிபெயர்ப்பாளர்களை நியமிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக அமைச்சர் சி.பி.ரத்னாயக்க தெரிவித்துள்ளார்.

தமிழ், சிங்கள மொழிகளில் நிபுணத்துவம் பெற்றவர்களை இப்பதவிகளுக்கு நியமிக்க நடவடிக்கை எடுத்துவருவதாகவும் அமைச்சர் கூறினார்.

பிரதேச செயலகம், வைத்திய சாலை போன்றவற்றில் இவ்வாறான உத்தியோகத்தர்களை நியமிக்க அமைச்சர் உத்தேசித்துள்ளார். (சு)

# நெல்சன் மண்டேலா

த. பாண்டியன்

## மீள்பார்வை 56



### தப்பி ஓட முயற்சி

1985 முதல் 87வரை நிபந்தனைகளைக் கைவிடுவது பற்றித் தான் இரு தரப்பும் பேசிக்கொண்டேயிருந்தன.

அரசு தரப்பில் பேசியவர்கள், ஆயுதப் போராட்டத்தைக் கைவிட் டாலன்றிப் பேச மாட்டோம் எனக் கூறி வந்த தேசியக்கட்சி, அதைக் கைவிட்டால் தனது கௌரவத்தை இழக்க நேரிடும். எனவே சாத் தியம் இல்லை என்றே சாதித்தனர். இதற்கு மாற்றுவழி பற்றி யோசித்த மண்டேலா, லுசாகாவிலிருந்த ஆப்பிரிக்கக் காங்கிரஸ் தலைவர் ஆலிவருடன் தொடர்பு கொண்டு அமைதிப் பேச்சுவார்த் தையை தென்னாபிரிக்கக் காங்கிரசுடன் தென்னாபிரிக்க அரசு பேச ஒப்புக்கொண்டுள்ளதால், அப்பேச்சு வார்த்தை நடக்க ஒத்துழைக்கும் வகையில் பேச்சு வார்த்தை முடியும் வரை ஆயுதப் போரட்டங்களை நிறுத்தி வைத்திருப்பதாக அறிவிக்கச் செய் தார். இதை அரசு தரப்பு ஏற்றது. கம்யூனிஸ்டுகளை விலக்கிட வேண்டும் என்ற நிபந்தனையை மாற்றி, அரசு தரப்பு ஆப்பிரிக்கக் காங்கிர சுடனும் தென்னாபிரிக்காவிலுள்ள அங்கீகரிக்கப்பட்ட கட்சிகள் அனைத் தையும் கொண்ட பேச்சுவார்த்தைக் குழுவுடன் பேசும் என அறிவித்து அந்தத் தடையையும் தாண்டினர். இதற்கு மூன்றாண்டுகள் பிடித்தன.

இதனால் தென்னாபிரிக்கக் காங்கிரஸ் சுத்த ஆப்பிசிக்கக் காங்கிரஸ், கம்யூனிஸ்டுக் கட்சி தேசியக்கட்சி ஆகியவற்றுடன் பலகட்சிகள் சேர்ந்து குழு அமைத்தது.

இந்தச் சமயத்தில் ஆளுங்கட்சியான தேசியக்கட்சிக்குப் பலமாகக் கருதப்பட்ட ஒரு தொகு தியில் நடைபெற்ற உபதேர்தலில் தேசியக்கட்சியை கன்சர்வேடிவ் கட்சி தோற்கடித்தது. இது டி-கிளார்க்கைக் கலங்கடித்தது. இதிலிருந்து மீள கருத்துத் தேர்தல் நடத்த (ரெவரண்டம்) யோசனை கூறப்பட்டது டி-கிளார்க் கருத்து வாக்கெடுப்பு நடத்தத் தேதி குறித்தார். அதற்காக அமெரிக்க மாதிரி தேர்தல் பிரச்சார முறைகள் அனைத்தையும் மிகப் பெரும் செலவில் நடத்தி னார். இதில் வெள்ளையர் மட்டும் வாக்களிக்க முடியும். மற்றவர்கள் வாக்களிக்க முடியாதபார் வையாளர்கள்தான். மீண்டும் நிறவெறி அடிப்படையிலான தேர்தல் ஒத்திகை! இருந்தாலும் இதைத் தென்னாப்பிரிக்கக் காங்கிரஸ் வேடிக்கை பார்க்க விரும்பவில்லை. டி-கிளார்க்கின் முயற்சிகளை அங்கீகரிக்கும் வகையில் அவரை ஆதரித்து வாக்களிக்க வேண்டுகோள் விடுத் தது. அந்தத் தேர்தலில் மிகப் பெருவாரியான வாக்குகள் டி-கிளார்க்கிற்குக் கிடைத்தன.

ஆக அமைதிப் பேச்சுவார்த்தைக்கு வெள்ளைநிற மக்களும் ஆதரவு தெரிவித்து விட்டனர். ஆனால், வாக்குகள் டி-கிளார்க்கிற்கு ஆணவத்தை வளர்க்குமோ எனவும் மண்டேலா அஞ்சி னார். இந்தத் தேர்தலில் ஒட்டப்பட்ட சுவரொட்டி, விளக்கொளி, பத்திரிகை, வானொலிப் பிரச் சாரத்தைப் பார்த்து, இதே ஆயுதங்களை அடுத்துவரும் தேர்தலில் நமக்கு எதிராகவும் வீசக் கூடுமே என நினைத்து மண்டேலாவும் சகாக்களும் பயந்தனர். இருந்தாலும், உயிருள்ள மக்கள் நம்பக் கம் உள்ளவரை, நமக்கேது தோல்வி என்று கூறி அச்சத்தைப் போக்கினார்.

சகாக்களுடன் பேசும்போது டி-கிளார்க்கை நேர்மையான மனிதர் என ஒருமுறை மண் டேலா வர்ணித்தார். இந்தச் சொல், மண்டேலாவுக்கு எதிராகப் பாய்ந்தது. டி-கிளார்க், புதுப் புதுத் திட்டங்களை அறிவித்தார். அதில் வட்டார வளர்ச்சித்திட்டம் என்பது ஒன்று இது மறை முகமாக மறுபடியும், வெள்ளையரின் சொத்துக்களையும், உரிமைகளையும், தற்காத்துக் கொள்ளுவதோடு, ஒதுக்கப்பட்ட மக்களை மேலும் ஒதுக்குப் புறங்களில் தள்ளி விடுவதாக இருந் தது. அதாவது புதிய பூச்சுடன் பழைய நிறவெறி இன ஒதுக்கீட்டு முறையை நிரந்தரம் ஆக்கும் திட்ட மாக இருந்தது.

இந்த நயவஞ்சகத் திட்டத்தை முற்றாக எதிர்க்க வேண்டிய நிலை வந்துவிட்டது. நேர்மை யான மனிதர் என்று டி-கிளார்க்கை ஒருமுறை குறிப்பிட்டது. மீண்டும் மீண்டும் குத்தலாகச் சுட்டிக்காட்டப்பட்டது. எவ்வளவு நண்பனாக இருந்தாலும் கூட, இன்னொரு கட்சித் தலைவரைப் பற்றி பேசும்போது எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்பதை மண்டேலா அனுபவப் பள்ளி யில் படித்தார்.

இருந்தாலும் நம்பிக்கையைக் கைவிடாமல் பேச்சுவார்த்தையைத் தொடர்ந்தார். டி-கிளார்க் கும் படிப்படியாக யதார்த்த உலகுக்கு இறங்கிவந்தார். டி.கிளார்க்கிடம் மண்டேலா, மனம் விட்டு பேசினார்.

"வெள்ளை நிற மக்ளிடம் ஒரு பயம் இருப்பதை உணருகிறேன் ஒருவருக்கு ஒரு வாக்கு என்று வந்துவிட்டால் நிச்சயமாக ஆப்பிரிக்க மக்களின் ஆட்சிதான் வரும் எனவே, ஆட்சி பீடம் ஏறியவுடன், வெள்ளையரை வேட்டையாடுவார்கள். சொத்துக்களைப் பறிமுதல் செய்வார் கள். ஆகவே, ஆப்பிரிக்காவை விட்டே ஓட நேரிடலாம் என்று தானே அஞ்சுகிறார்கள். இந்த அச்சம் இருப்பது இயற்கை. அதேபோல எங்களது மக்களும் முன்னூறு ஆண்டுக்கொடுமைகளை நினைத்துப் பழிவாங்கும் உணர்வோடு தான் இருக்கிறார்கள்.

எனவே உங்களது மக்களின் அச்சத்தையும் போக்க வேண்டும். எங்களது மக்களின் வெறுப்பு உணர்வையும் மாற்ற வேண்டும். நாம் எல்லோரும் சமமாக, சம உரிமைகளோடு, இதே மண் ணில் சகோதரர்களாகத் தொடர்ந்து வாழவேண்டும். இதே போல, தாங்களும் துரத்தியடிக்கப் படக்கூடிய அபாயம் இருப்பதாக எங்களுடன் சிறையிலிருக்கும் இந்திய சகோதாரர்களும் நினைக் கின்றனர். எனவே நமது வேலை மிகக் கடினமானது. நீங்களும் விசுவாசமாக சில நிர்வாக நட வடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். அதைத் தொடர்ந்து எல்லோரையும் விடுவிக்க வேண் டும். தடைகளை எல்லாம் நீக்கிவிட வேண்டும். பின்னர் பொதுவான ஜனநாயக அரசியல் சட்டத்தை உருவாக்க வேண்டும் வயது வந்தோர் அனைவர்க்கும் வாக்குரிமை வழங்கித் தேர்தல் நடத்தி, அனைத்துக் கட்சிகளும் பங்குகொள்ளும் அரசை அமைக்கலாம். அதுதான் பிரச்சினை களைத் தீர்க்கவழி. என்னை விடுதலைசெய்து பயனில்லை. அநியாயத்தை அடிப்படையாகக் கொண்ட சட்டமும், அமைப்பும் கலைக்கப்படாமல், புதுப்புது வடிவங்களில், பழையவற்றைக் காப்பாற்ற முயற்சிப்பதுபேதமை, மக்களின் ஒப்புதலைப் பெறாத ஆட்சி எத்தனை நாளைக்கு நிலைக்கும். மக்கள் ஒருவரையொருவர் கொன்று ரத்தம் ஓடுவது தான் நடக்கும். எனவே துணிந்து நடவடிக்கைகளை எடுக்க வேண்டியது உங்களது பொறுப்பு" என்றார்.

டி-கிளார்க்கிற்கு மண்டேலா ஒரு கட்சியின் பிரதிநிதியாக அல்லாமல், தேச மக்களின் தலை வராக நின்று பேசுவது தெளிவாயிற்று அவரது சொல்லுக்கும் செயலுக்கும் முரண்பாடு இல்லை என்பதும் புரிந்தது.

இருந்தாலும் தேர்தலில் லிபரல் கட்சி முழுமையாகத் தோற்றகடிக்கப்பட்டு, கன்சர்வேடிவ் கட்சி, இரண்டாவது இடத்தைப் பிடித்து விட்டது. டி-கிளார்க்கைப் பயமுறுத்திக்கொண்டே இருந் தது. மண்டேலாவுக்கும், தென்னாபிரிக்கக் காங்கிரஸ் மாநாட்டைக் கூட்டி, ஒரு தீர்மானத்தை எடுக்காத குறை காரணமாகவே, முழுவேகத்தில் நடவடிக்கை எடுக்க முடியாத தயக்கம் இருந்தது.

(தொடரும்)

# நிரந்தர சமாதானம் ஏற்படுவதற்கு புலிகள் பேச்சுக்கு உடன்பட வேண்டும்

## இந்திய பாதுகாப்பு ஆலோசகர் நாராயணன்

(கொழும்பு)

இலங்கையில் நிரந்தர சமா தானம் ஏற்படவேண்டுமானால் தமிழீழ விடுதலைப் புலிகள் மீண் டும் சமாதானப் பேச்சுவார்த் தைக்கு செல்ல உடன்பட வேண்டு மென்று இந்திய பாதுகாப்பு ஆலோசகர் என்.கே.நாராயணன் வலியுறுத் தியுள்ளார்.

இலங்கையின் தற்போதைய நிலைமைகள் குறித்து விளக்க மளிக்க சென்றிருக்கும் நோர்வே அமைச்சர் எரிக்சொல் ஹெய்ம் முடன் கலந்துரையாடியபோதே அவர் இதனைத் தெரிவித்துள் ளார்.

இதேவேளை இலங்கையின் இனப்பிரச்சினையை தீர்க்கும் வகையிலான சில பிரேரணை களையும்சொல்ஹெய்ம் அவரிடம் முன்வைத்துள்ளார். இலங்கை அரசு சமாதான நடவடிக்கைகளை துரிதப்படுத்துவதற்கு இந்திய அரசு அழுத்தம் கொடுக்க வேண்டும்.

அத்துடன் வடக்கு-கிழக்கில் இடம்பெறும் கொலைகளை நிறுத்த இருதரப்பும் முன்வருவதற்கு தேவை யான அழுத்தங்களை வழங்க வேண்டும். மேலும் வடக்கு-கிழக் கில் இடம்பெறும் வன்முறைகளால் இலங்கைத் தமிழர்கள் தமிழகத் துக்கு செல்வது குறித்தும் சொல் ஹெய்ம் பாதுகாப்பு ஆலோசக ருக்கு எடுத்துக்கூறினார். (க-9)

# நாட்டில் நிலைமை மோசமடைவதற்கு யுத்தநிறுத்த ஒப்பந்தமே காரணம்

## என்கிறார் சோமவன்ச அமரசிங்க

(கொழும்பு)

நாட்டில் தற்போது ஏற்பட் டுள்ள அரசியல் நிலைமைகள் குறித்து மக்கள் விசேட கவனம் செலுத்த வேண்டுமென்று ஜே. வி.பி.கட்சியின் தலைவர் சோம வன்சஅமரசிங்கதெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் காலை கொழும்பில் இடம் பெற்ற ஊடக வியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே சோமவன்ச அமரசிங்க இவ்வாறு கூறினார்.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரம சிங்கவுக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்குமிடை யில் செய்து கொள்ளப்பட்ட உடன் படிக்கையே தற்போதைய குழப்ப மான நிலைமைக்கு காரணம் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

தற்போதைய சூழ்நிலையில் அரசாங்கம் மேற்கொண்டுள்ள கோட்பாடுகள் குறித்தும் மக்களும் அரசாங்கமும் நாட்டை சரியான பாதையில் இட்டுச் செல்வதற்கான பலத்தை கொண்டிருப்பது பற்றியும் கூறி அதற்கு பாராட்டு தெரிவித் தார். (க-9)





காரைநகரில் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையினரால் நீர் விநியோகத்திட்டம் அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்நிகழ் வினை யாழ்.மாவட்ட அரச அதிபர் கே.கணேஷ் நாடாவெட்டி ஆரம்பித்து வைப்பதனையும் நீர்விநியோகத்தினை சம்பிரதாயமாக திறந்து வைப்பதனையும் பொறியியல் உதவியாளர் ஜே.எ.இராசநாயகம், காரைநகர் உதவி அரச அதிபர் க.ஸ்ரீமோகனன், வடபிராந்திய நீர்ப்பாசன பொது முகாமையாளர் ரி.பாரதி ராஜா ஆகியோரையும் படங்களில் காணலாம். (காரைநகர் செய்தியாளர்)


# பத்திரிகை விநியோகஸ்தர் தேவை

சொந்தமாக மோட்டார் சையிக்கிள் வைத்திருப்பவராகவும், சாரதி அனுமதிப்பத்திரம், பெற்றிருப்பதுடன் யாழ். நகரிலிருந்து 5 கி.மீ. தூரத்திற்குள் வசிப்பவராகவும் இருத்தல் வேண்டும். ஆர்வமுடையோர் 31.5.2006ஆம் திகதிக்கு முன்னராக கீழ் காணும் முகவரிக்கு தங்கள் விண்ணப்பத்தை அனுப்பிவைக் கலாம்

நிர்வாக உத்தியோகத்தர்,
வலம்புரி அன்கோ
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

நல்ல எண்ணங்கள், நல்ல மொழிகள், நல்ல செயல்கள் இவற்றில் உள்ள சக்தி அளவற்றதாகும். அதையே நாம் பயன்படுத்த வேண்டும்.

- ராஜாஜி

வலம்புரி

# ஏ-9 பாதையை மூடிவிடும் அறிகுறி தெரிகிறது

யுத்த நிறுத்த உடன்படிக்கையால் தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட ஒரே ஒரு நன்மை என்றால் அது ஏ-9 பாதை திறப்பாகவே இருக்கும்.

எனினும் தற்போதைய சூழ்நிலையில் ஏ-9 பாதையை படையினர் திடீரென மூடி விடுகின்றனர். ஏ-9 பாதையை திடீரென மூடி விடும் போது அதற்கு பாதுகாப்புக் காரணங்கள் படைத்தரப்பால் கூறப்பட்டாலும் பொதுமக்களின் பயணத்திற்கு தடை விதிப்பது எங்ஙனம் பொருத்தமானது என்பதை உரியவர்கள் விளக்கவேண்டும்.

யாழ்ப்பாணத்திற்கும் பிற மாவட்டங்களுக்குமான தரை வழிப்பாதையாக இருக்கக்கூடிய ஏ-9வீதியால் போக்கு வரத்துச் செய்கின்ற மக்கள் பல்வேறு தேவைகளைக் கொண்டவர்கள்.

குறிப்பாக கொழும்பில் அதிதீவிர சிகிச்சைக்குட்படுத்தப்பட வேண்டியவர்களும் ஏ-9 வீதியால் பயணிக்கின்றனர்.

இந் நிலையில் அந்த வீதியை எதுவித முன்னறிவித்தலும் இன்றி திடீரென படைத்தரப்பு மூடிவிடுகின்றது. இதனால் மக்கள் பெரும் அசௌகரியங்களை அனுபவிக்க நேரிடுகின்றது.

யுத்த நிறுத்த உடன்படிக்கையின் பிரகாரம் பாதையை தற்காலிகமேனும் மூடுவதாக இருந்தால் அதற்கு விடுதலைப்புலிகளினதும், வழித்துணை வழங்கும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினதும் அனுமதியைப் பெறவேண்டும்.

எனினும் ஏ-9 பாதையை திடீரென மூடும்போது அதற்கான அனுமதியை படைத்தரப்பு விடுதலைப் புலிகளிடம் பெறுவதாக இல்லை. இந் நிலைமை எதிர்கால ஆரோக்கிய சூழ்நிலைக்கு குந்தகமாகவே அமையும்.

லொறிகளில் வெடிபொருட்கள் எடுத்து வரப்படுகின்றன ,ஆட்டோவில் கிளைமோர்க்குண்டு எடுத்துச் செல்லப்படுகின்றன என படைத்தரப்புக் கூறுவதானது எவ்வளவு தூரம் உண்மைத் தன்மை வாய்ந்தது என்பதை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் போன்ற அமைப்புக்கள் உறுதி செய்யவேண்டும்.

வழித்துணை வழங்கும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் இது விடயத்தில் மௌனம் சாதிக்குமாயின் அதனால் பாதிப்படையப்போபவர்கள் பொதுமக்களே என்பது உணரப்படவேண்டியதாகும்.

மேலும் ஏ-9 பாதையால் வெடிபொருட்கள் எடுத்துச் செல்லப்படுகின்றன என படையினர் கூறிக் கொண்டு பாதையை மூடிவிடுவதானது எதிர்காலத்தில் ஏ-9 பாதை நிரந்தரமாக மூடப்படப்போகின்றது என்பதன் அறிகுறி ஏன்றே கருதவேண்டும்.

எதுவாயினும் எ-9பாதையை மூடிவிடுவதால் பொதுமக்கள் எதிர்கொள்ளக்கூடிய அசௌகரியங்களை படைத்தரப்பு உணர்ந்து கொண்டு அதற்கு ஏற்றவாறு நடந்து கொள்ள வேண்டும்.

இதற்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு என்பன உரியவாறு செயற் திட்டங்களை வகுப்பது கட்டாயமானதாகும்.

# மஹிந்தவுடன் புலம் பெயர்ந்த கனடா தமிழர் போர் பிரகடனம்

## யூலை- 1முதல் முழுமையான புறக்கணிப்பு

சமாதான முன்முயற்சிகளை முழுமையாக சிதைத்து இலங்கைத்தீவில் அவலத்தையும், அழிவையும் திணிக்கும் வகையில் போர் ஒன்றை முன்னெடுக்க முயலும் மஹிந்தவின் அரசிற்கு பதிலடி கொடுக்கும் வகையிலும், புலம்பெயர்ந்த தமிழருடன் சீண்டாதே என்பதை வலியுறுத்தியும் எமது தாயக உறவுகளை சர்வதேசத்தில் இருந்து நீ தனிமைப்படுத்தலாம் என்று நினைத்தால் நாம் உன்னை சர்வதேசத்தில்இருந்து தனிமைப்படுத்துவோம் என்பதை அடித்துக்கூறும்வகையிலும் ஒரு துண்டுப்பிரசுரம் ரொரன் ரோவில் நடைபெற்ற உரிமைக்குரல்நிகழ்வின் இறுதியில் இளையவர்கள் சிலரால் விநியோகிக்கப்பட்டது. அதனை வாசித்த பலரும் அம்முயற்சிக்கு பலத்த ஆதரவை வெளியிட்டதையும்காணக் கூடியதாகஇருந்தது. அப்பிரசுரத்தை இங்கே தருகின்றோம்.

அன்பான உறவுகளே!

எமது உறவுகள் ஒவ்வொரு நாளும் எம் தாயக மண்ணில் கொன்றொழிக்கப்பட்ட வண்ணம் உள்ளனர். நாயைப் போல தெருவிலும் பயிலும் இடத்திலும் தொழிலகத்திலும் படுக்கையிலுமாக எம் உறவுகள் குதறப்படுகின்றனர்.

நான்கு வருடம் சர்வதேசத்தின் வேண்டுதலுக்காக எம் உறவுகள் ஒரு சமாதானப் பயணத்தில் நம்பிக்கையுடன் பயணித்தனர் என்ன நடந்தது? சமாதானம் வந்ததா? தீர்வு கிட்டியதா? ஒரு போர் நிறுத்த ஒப்பந்தமே நான்கு ஆண்டுகளின் பின் தனது வாழ்நாளை எண்ணிக் கொண்டிருக்கின்றது.

முதலில் இயல்வு வாழ்க்கை வரும் என்றது சர்வ தேசம்.

இன்று எம் மக்கள் தங்கள் உயிரைக்காத்துக்கொள்ள தங்கள் வாழ்விடங்களைவிட்டே ஓடிக்கெண்டிருக்கின்றார்கள் ஆக்கிரமிப்பாளர்களின் வெறியாட்டம் எங்கும் தலைவிரித்தாடுகின்றது.

இந்நிலையில் தான் உதவுகிறேன் நம்புங்கள் என்று வந்த சர்வதேசமும் மனிதத்தை தொலைத்துவிட்டு நிற்கின்றது. வழிசமைத்தக்கொடுப்தை விடுத்துவிட்டு வழியடைத்து படுகொலை ஒன்றிற்கு துணைபோகின்றது.

தாயகத்தில் ஒரு இனப்படுகொலையை நடத்திய வாறு புலம்பெயர்ந்த மக்கள் மீதும் வீண்பழி சுமத்தி அங்கும் அவர்களை வாழா மடந்தையாக்க மஹிந்த முனைந்து நிற்கின்றார்.

நாம் தாயக உளவுகளுக்காகஅவர்களின் உண்மையான நிலையை சர்வதேசத்திற்கு உணர்த்துவதற்கு ஒன்று கூடி நிற்கின்றோம் .

இன்று 12 நாடுகளில் நாம்அணிவகுத்து நிற்கின்றோம் நாம் சர்வதேசத்தில் அதன் குடிமக்களாக நிமிர்ந்து நிற்கின்றோம். 2006 ஆம் ஆண்டில் தோற்றுப் போன தேசங்களில் ஒன்றாக அறிவிக்கப்பட்டுள்ள இலங்கையை சர்வதேசத்தில் இருந்து முழுமையாக அன்னியப்படுத்துவோம்.

முதலில் எம்உறவுகள் மீது ஏற்கனவே ஒரு உத்தியோகபற்றற்ற பொருளாதாரத்தடையை விதித்திருக்கும் மஹிந்தருக்கு அதிர்ச்சி வைத்தியமான எமது பொருளாதாரத் தடையை அமுல்செய்வோம்

இலங்கை அரசின் பொருட்களின் கொள்வனவுகளை எமது புலம்பெயர்ந்த நாடுகளில் தவிர்ப்போம் தற்போது உள்ள சரக்குகள் போகதொடர்ந்து இலங்கை அரச பொருட்கள் தொடர்பான கொள்வனவுகளை நிறுத்துமாறு எமது வணிகர்களை அன்புடன் வேண்டுவோம்.

மாற்றீடான கொள்வனவுகள் உண்டு என்பதால் அது குறித்த முயற்சிகளில் உடன் கவனம் செலுத்துமாறு வணிகர்களை வேண்டுவோம். எமது கொள்வனவுகளால் மட்டும் பல மில்லியன் டொலர்களை மஹிந்தவின் அரசு வருவாயாகப் பெறுகின்றது என்பதை நாம் அனை வரும் நன்கறிவோம் எம் பணத்தில் எம் உறவுகளையே கொல்லுகின்றார் மஹிந்த.

புலம்பெயர்ந்த 8 இலட்சம் தமிழர்களை மஹிந்த சீண்டிப் பார்க்கின்றார் அவருக்கு பதில் சொல்லும் வலுவில் வல்லமையில் புலம்பெயர்ந்த தமிழர்கள் நாம் இருக்கின்றோம் என்பதை உடன் காட்டும் முயற்சியில் இது வெறும் ஆரம்பமே.

வரும் நாட்களில் மேலும் பல விடயங்களை உங்களுடன் பகிர்ந்து கொள்வோம். எமது வர்த்தகர்களுக்கு பங்கம் வராத வகையிலும் எமது ஒற்றுமையின் வெளிப்பாடாகவும் கனடா தினமான வரும் யூலை 1ஆம்திகதி முதல் முழுமையான இலங்கை பொருட்களின் புறக்கணிப்பை அனைவரு மாகமுன்னெடுப்போம் என்று அந்தப் துண்டுப்பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (க)

# அரசு பக்கம் எம்.பிக்கள் தாவுவதை தடுக்க ஐ.தே.கவில் மறு சீரமைப்பு?

(கொழும்பு)

ஐக்கியதேசியக்கட்சியின் நடாளுமன்ற உறுப்பினர்கள், அரசாங்கம் பக்கம் தாவுவதைக் தடுக்க ஐக்கியதேசியக் கட்சியில் மறுசீரமைப்பு மேற்கொள்ளப்பட வேண்டும் என்று அக்கட்சியின் தேசிய ஓருங்கிணைப்பாளர் எஸ்.பி. திஸநாயக்க வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் ஊடகம் ஒன்றுக்கு கருத்துக் கூறுகையில்,

ஐக்கியதேசியக் கட்சியில் ஜனநாயக ரீதியான மறுசீரமைப்புக்கள் அவசியமாகும். கட்சியில் மறுசீரமைப்பு மேற்கொள்ளப்படாததால் குழம்பிய குட்டையில் எளிதாக மீன்பிடிக்கின்றனர்.

ஐ.தே. கவினர் அரசாங்கம் பக்கம்தாவுவதைத்தடுக்க கட்சி மறுசீரமைப்பு நடவடிக்கைகள் மிகவும் அவசியமானது என்றார். இதனிடையே எதிர்வரும் ஜுன் மாதம் ஐக்கிய தேசியக்கட்சியில் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படக்கூடிய சாத்தியங்கள் இருப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஐ.தே. க தலைமைப் பதவிக்கு தற்போதையபிரதித் தலைவரான கருஜயசூர்யவை நியமிக்க வேண்டுமென்று நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்த விஜய சேகர பரிந்துரைத்துள்ளார். பிரதித் தலைவராகஎஸ்.பி. திஸநாயக்கவை அவர் பரிந்துரைத்துள்ளார்.

மேலும் அரசாங்கம் பக்கத்துக்கு ஐக்கியதேசியக்கட்சியினர் தொடர்ந்து தாவி வரும்நிலையில் அரசாங்கத்துக்கான ஆதரவு குறித்து கட்சியின் அரசியல் விவகாரக் குழுக் கூட்டத்தில் விவாதிக்கப்பட உள்ளதாக அக்கட்சியின் பிரதிப் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்த நாயக்க கூறியுள்ளார். (க)

# ஐ.நா.சபையின் அமைதிப்படை வந்தால் விரைவில் ஈழம் உருவாகும்

## ஜே.வி.பி அச்சம்

இலங்கைக்கு ஐக்கிய நாடுகள் சபையினது அமைதிப் படை அனுப்பி வைக்கப்பட்டால் தமிழீழத்தை விடுதலைப் புலிகள் அமைத்துவிடுவார்கள் என்று ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கை கயில்,

இலங்கை அரசாங்கம் ஒரு தோல்வியடைந்த நாடு என்பதை சர்வதேச சமூகத்திற்கு வெளிப்படுத்துவதற்காக சில உள்ளூர் அரசியல் கட்சிகள் ஐ.நா.படை குறித்து பேசி வருகின்றன. இலங்கைக்கு ஐ.நா.படை அனுப்பப்படுவதை ஜே.வி.பி.முற்றாக எதிர்க்கிறது. எமது தேசியப் பிரச்சினையில் ஐ.நா.தலையிட எதுவித காரணமும் இல்லை.

இலங்கை ஒரு தோல்வியடைந்த நாடு என்பதை வெளிப்படுத்த சர்வதேச சக்திகளுடன் ஐக்கிய தேசியக் கட்சியினர் இணைந்து கொண்டு ஐ.நா.அமைதிப்படையை அனுப்ப முயற்சிக்கின்றனர்.

அவ்வாறு இலங்கைக்கு ஐ.நா.படை அனுப்பிவைக்கப்பட்டால் தமிழீழ விடுதலைப் புலிகள் ஈழத்தை அமைக்க எளிதாக அமைந்துவிடும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (க)

# கும்பாபிஷேகம்

சுன்னாகம், மயிலனி, திருக்குடவாயில் சிவன் கோவிலில் கும்பாபிஷேகம் நாளை வியாழக்கிழமை நடைபெறவுள்ளது. கும்பாபிஷேக நிகழ்வை முன்னிட்டு இன்று பகல் 12 மணிவரை எண்ணெய்க்காப்பு நடைபெறும்.

தொடர்ந்து 15 நாட்களுக்கு மண்டலாபிஷேகம் நடைபெறவுள்ளதாக ஆலய ஆதீன கர்த்தாக்கள் தெரிவித்துள்ளனர். (து)


# ஈ.பி.டி.பி. கண்டனம

(யாழ்ப்பாணம்)

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் முக்கியஸ்தரும் முன்னாள் யாழ்.மாநகர சபையின் உறுப்பினருமான மைக்கல் ஜேசுதாசன் நேற்று முன்தினம் நாவாந்துறையில் வைத்து இனந்தெரியாதவர்களால் சுட்டுக்கொல்லப் பட்டுள்ளார்.

சமாதான நீதவானாகிய அவரிடம் கையொப்பம் வேண்டுவதற்கென்று சென்ற சிலர் நிராயுதபாணியான இவரை சுட்டுக்கொன்றுள்ளனர். சிறந்த மக்கள் சேவகனும் உயர்ந்த பண்பாளனுமாக வாழ்ந்த தோழர் ஜேசுதாசனின் இழப்பு மக்களை நேசிப்பவர்களுக்கும் பன்மைத்துவத்தை விரும்புவர்களுக்கும் பேரிழப்பாகும் என ஈ.பி.டி.பி. வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவரின் பிரிவுத்துயரில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் தோழர்களும் ஆதரவாளர்களும் கண்ணீரோடு பங்கெடுத்துக் கொள்கின்றோம் என்று அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (க)

## தினசரி தியானம் விவேகச் சிந்தனைகள்



உணர்ச்சி வேகம் தவறு செய்யத் தூண்டும். ஆனால், விவேகத்தினாலும் பயிற்சியாலும் தெய்வ பக்தியாலும் உணர்ச்சிக்கு பலியாகாமல் சமநிலையில் இருக்கப்பழக வேண்டும்.

சுவாமி விவேகானந்தர்

# கருணா குழு உறுப்பினர்களுடன் கண்காணிப்புக் குழுவினர் பேச்சு

(திருகோணமலை)

மூதூரில் விடுதலைப் புலிகள் மீது தாக்குதல் நடத்துவதற்காக வந்த போது விடுதலைப் புலிகளால் கைதுசெய்யப்பட்ட கருணா குழுவைச் சேர்ந்த இருவரை நேற்று இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு மற் றும் சர்வதேச செஞ்சிலுவைச்சங்கக்குழு ஆகியவற்றின் பிரதிநிதிகள் சந்தித்துப் பேசியுள்ளனர்.

மூதூர் கிழக்கு சம்பூரிலுள்ள விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல்துறை செயலகத்தில் நடைபெற்ற சந்திப்பில் புலிகளின் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலன் கலந்துகொண்டார்.

கடந்த 26 ஆம் திகதி மூதூரில் விடுதலைப் புலிகளின் முன்னரங்க நிலைகள் மீது தாக்குதல் நடத்துவதற்காக வந்த கருணா குழுவைச் சேர்ந்த ஐவர் மீது தாக்குதல் நடத்திய புலிகள் அவர்களில் இருவரைக் கைதுசெய்தனர். சம்பவத்தில் மூன்று கருணா குழுவினரும் கொல்லப்பட்டனர்.

மதுரங்குளியைச் சேர்ந்த பி.விஜேந்திரன் (வயது25) மற்றும் பனிச்சங் கேணியைச் சேர்ந்த எஸ்.குணராஜன் (வயது 22) ஆகிய கருணா குழுவினரே புலிகளால் கைதுசெய்யப்பட்வர்களாவர்.

புலிகளின் மீதான தாக்குதலுக்காக தாங்கள் இருவரும் வெலிக்கந்தை தீவுச்சேனை முகாமிலிருந்து டொல்பின் வான் ஒன்றில் திருகோணமலைக்கு கூட்டிவரப்பட்டதாகவும் அங்கு கடற்கரைக்குப் பக்கமாகவுள்ள இராணுவ முகாம் ஒன்றில் தங்கவைக்கப்பட்டதாகவும் அங்கிருந்து மூதூர் பிரதேசத்தின் தோப்பூரில் அமைந்துள்ள பட்டியடி இராணுவ முகாமிற்கு வாகனம் ஒன்றில் அழைத்துச்செல்லப்பட்டதாகவும் அவர்கள் கண்காணிப்புக்குழுவிடம் தெரிவித்ததாக செய்திகள் வெளியாகியுள்ளன.

அங்கு விடுதலைப் புலிகளின் முன்னரங்க நிலைகளுக்கும் இராணுவ முன்னரங்க நிலைகளுக்கும் இடையிலான சூனியப் பிரதேசத்திற்கு அனுப்பப்பட்ட தாம், புலிகளின் மீது தாக்குதல் நடத்தும்படி இராணுவ அதிகாரி ஒருவரால் பணிக்கப்பட்டதாகவும் அன்றைய தாக்குதலில் தாம் இருவரும் புலிகளால் கைதுசெய்யப்பட்டதாகவும்;

தாக்குதலுக்கு தமது தரப்பில் தலைமை தாங்கிவந்த கறுப்பு ரவி உட்பட மூவர் கொல்லப்பட்டதாகவும் கண்காணிப்புக்குழு மற்றும் சர்வதேச செஞ்சிலுவைச்சங்கப் பிரதிநிதிகளிடம் அவர்கள் கூறினர். (ச-5)

# தலைவர் பிரபாவை கைது செய்யாமை குறித்து விளக்கமளிக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை கைதுசெய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தாமை குறித்து எதிர்வரும் ஜீலை 12ம் திகதி விளக்கமளிக்குமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் பொலிஸ்மா அதிபருக்கு உத்தரவிட்டுள்ளது.

விடுதலைப்புலிகளின் தலைவரை கைதுசெய்யுமாறுகோரி பிறப்பிக்கப்பட்ட மனுவை விசாரணை செய்த பின்னர் பொலிஸ்மா அதிபர் மற்றும் குற்றப் புலனாய்வுத் திணைக்களப் பணிப்பாளருக்கும் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபரும், ஜாதிக ஹெல உறுமய கட்சியின் உறுப்பினருமான எச்.எம்.ஜி.பி.ஹொட்டகதெனிய இந்த மனுவை தாக்கல் செய்தார்.

கடந்த 2002 ஆம் ஆண்டு வழங்கப்பட்ட மத்திய வங்கிக் குண்டுவெடிப்பின் தீர்ப்புப்படி தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் கொழும்பு மேல் நீதிமன்றத்தினால் 200 ஆண்டு கடூழிய சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளதாக அந்த மனுவில் குறிப்பிடப் பட்டது.

இந்த சிறைத்தண்டனையை நடைமுறைப்படுத்துவது குறித்து தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை கைதுசெய்து மேல்முறையீட்டு நீதிமன்றில் ஆஜர்படுத்தவேண்டும் என்ற உத்தரவை பொலிஸ்மா அதிபருக்கு வழங்கியிருந்ததாக அந்த மனுவில் மேலும் குறிப்பிடப்பட்டிருந்தது. (ச-5)

## 100 பவுண் நகைகள் திருட்டு

யாழ். கச்சேரி நல்லூர் வீதியிலுள்ள வீடொன்றிலிருந்து 100 பவுண் நகைகள் திருடப்பட்டுள்ளது. நேற்றுமுன்தினமிரவு குறிப்பிட்ட வீடொன்றினுள் நுழைந்த 10 பேர்கொண்ட குழுவொன்று இத் திருட்டுச் சம்பவத்தில் ஈடுபட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வெளிநாட்டிலிருந்து வந்தவர்கள் தங்கியிருந்த வீட்டிலேயே இந்தத் திருட்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதேவேளை இச் சம்பவத்துடன் தொடர்புடைய இருவர் கைதுசெய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். (ச-5)

# காவல்துறைப் பொறுப்பாளருடன் க.கா.குழுத்தலைவர் சந்திப்பு

(கிளிநொச்சி)

தமிழீழ விடுதலைப்புலிகளின் காவல்துறை மற்றும் நீதி நிர்வாகத்துறைப் பணிகளை இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவர் உல்ப் ஹென்றிக்சன் தலைமையிலான குழுவினர் பார்வையிட்டுள்ளனர். கிளிநொச்சியில் அமைந்துள்ள தமிழீழ நீதி நிர்வாகத்துறை சட்டக்கல்லூரியில் நேற்று முற்பகல் நீதி நிர்வாகச் செயற்பாடுகள் குறித்து அவர் கலந்துரையாடினார்.

அதன் பின்னர் கிளிநொச்சியில் அமைந்துள்ள தமிழீழ காவல்துறையின் நடுவப்பணியகத்தில் காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் தலைமையிலான குழுவினரைச் சந்தித்துப் பேசினர். இச் சந்திப்பில் காவல்துறையின் செயற்பாடுகள் குறித்தும் சமகால அரசியல் நிலைவரம் குறித்தும் ஹென்றிக்சன் கேட்டறிந்து கொண்டார். (ச-5)

## 12 சிங்கள....

கொல்லப்பட்டவர்களின் சடலங்கள் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் உதவியுடன் பொலநறுவை வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டுள்ளதாகவும், மரண விசாரணையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படுமெனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை இச் சம்பவத்தையடுத்து அந்தப் பகுதியைச் சேர்ந்த சுமார் 150 தமிழ் குடும்பங்கள் அங்கிருந்து விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியான வாகரைக்கு இடம்பெயர்ந்துள்ளார்கள். (ச-5)

## ஒஸ்லோவுக்குச்....


புலிகளின் ஊடகத்துறைப் பொறுப்பாளர் தயா மாஸ்ரர் தெரிவித்துள்ளார். இது குறித்து நோர்வேயின் சமாதானத் தூதுவர் எரிக்சொல்ஹெய்மிற்கு தெரியப்படுத்தவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ச-5)

## பயங்கரவாத.....

செப்ரெம்பர் மாதம் தடைசெய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை இராஜதந்திர அளவில் பாரிய விவாதங்களுக்குப் பின்னர் இந்தத் தடை விதிக்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. ஜெனிவாப் பேச்சுக்களில் புலிகளைப் பங்கேற்க வைப்பதற்கான ஒரு நடவடிக்கையாக இது மேற்கொள்ளப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இத்தகைய தடைவிதிப்பு நடவடிக்கையானது அமைதி முயற்சிகளில் தங்களது நடுநிலையான பணிக்கு பாதிப்பு ஏற்படுத்தும் என்று நோர்வே அரசாங்கம் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-5)



மோசமடைந்துவரும் வடக்கு-கிழக்கு நிலைமை குறித்து யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் மறை மாவட்ட ஆயர்கள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவை சந்தித்து பேசிய போது..

## சிங்கள....

படுகொலை செய்வதை எந்தவொரு சூழலிலும் நியாயப்படுத்தமுடியாது.

இத்தகைய படுகொலைகள் தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகள் மீது குறிப்பிட்ட ஒரு சர்வதேச செய்தி நிறுவனம் குற்றம்சாட்டியுள்ளமை எமக்கு அதிர்ச்சியளிக்கின்றது.

இது தொடர்பில் எம்மைத் தொடர்புகூட கொள்ளாமல் செய்தியை அந்நிறுவனம் வெளியிட்டுள்ளது. எதிர்பாராதவிதமாக சில முன்னணி ஊடகங்களும் இதை பிரசுரம் செய்துள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகளை தொடர்பு கொள்ளாமலேயே தமிழீழ விடுதலைப்புலிகள் மீது குற்றம்சாட்டும் அதே சர்வதேச செய்தி நிறுவனம் ஏற்கனவே இரு சம்பவங்களை வெளியிட்டிருந்தது.

இத்தகைய ஆதாரமற்ற வகையிலான செய்தியை சர்வதேச செய்தி நிறுவனம் வெளியிடுவது குறித்து நாம் அதிர்ச்சியடைகிறோம். படுகொலை செய்யப்பட்டுள்ள 12 அப்பாவி சிங்களவர் குடும்பங்களுக்கு எமது அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம் என்று அதில் குறிப்பிடப் பட்டுள்ளது. (ச-5)

## வன்முறைகளை நிறுத்தாவிட்டால்....

தடுக்கமுடியாத நிலையில் இலங்கைப் பிரச்சினையில் மேலதிக உதவுவது குறித்து இந்த மாநாட்டில் விவாதிக்கப்பட்டது.

இலங்கையில் சீர்குலைந்திருக்கும் நிலைமைகளை மாற்றியமைக்கவும் மீண்டும் அமைதிப் பாதைக்குத் திரும்பவும் இரு தரப்பினரையும் இணைத் தலைமை நாடுகள் வலியுறுத்தியுள்ளன.

தமிழீழ விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தையில் கட்டாயம் பங்கேற்கவேண்டும். பயங்கரவாதம் மற்றும் வன்முறைகளை அது கட்டாயம் கைவிடவேண்டும். ஐக்கிய இலங்கை என்ற கட்டமைப்புக்குள் அரசியல் வழித் தீர்வுகாண அரசியல் சமரசங்களை அது வெளிப்படுத்தவேண்டிய அவசியம் உள்ளது.

இலங்கையிலேயே அனைத்து மக்களினதும் ஜனநாயக உரிமைகளை உள்ளடக்கியதாக அந்தத் தீர்வு இருக்கும். அதற்கான சாதகமான நடவடிக்கைகளை சர்வதேச சமூகம் மேற்கொள்ளும். இதை மேற்கொள்ளத் தவறினால் தமிழீழ விடுதலைப் புலிகள் மிகவும் தனிமைப்படுத்தப்படுவர்.

தமிழ்மக்களது சட்டபூர்வமான உரிமைகளுக்கு அரசாங்கம் முகங்கொடுத்து தீர்வு காணவேண்டும். தனது கட்டுப்பாட்டுப் பகுதியில் பயங்கரவாதம் மற்றும் வன்முறைச் செயல்களை மேற்கொள்ளும் குழுக்களை அது தடுக்கவேண்டும்.

நாடுமுழுவதும் உள்ள தமிழர்களின் பாதுகாப்பையும், உரிமைகளையும் கட்டாயம் அது பாதுகாக்கவேண்டும். வன்முறையாளர்களைத் தண்டிக்கவேண்டும்.

முஸ்லிம்களை உள்ளடக்கிய அனைத்து இலங்கையர்களுக்கும் உரிமைகள் வழங்கக்கூடிய ஒருபுதிய நிர்வாக அமைப்பை உருவாக்குவதற்கான பாரிய அரசியல் மாற்றங்களுக்கு அரசாங்கம் தயாராகவேண்டும்.

அத்தகைய நடவடிக்கைகளுக்கு சர்வதேச சமூகம் உதவும். அத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தவறினால் சர்வதேச சமூகத்தினது ஆதரவை இழக்கநேரிடும் என இணைத் தலைமை நாடுகளின் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

ஜெனிவாவில் 2006 பெப்ரவரியில் நடத்தப்பட்ட சந்திப்பின்போது ஒப்புக்கொள்ளப்பட்ட விடயங்களை இருதரப்பினருமே செயற்படுத்தத் தவறிவிட்டனர் என்று இணைத் தலைமைநாடுகள் கருதுகிறது.

பல்வேறு பயங்கரவாதத் தாக்குதலுக்கு விடுதலைப் புலிகள் பொறுப்பாவார்கள். வன்முறை சக்திகளான கருணாகுழு மற்றும் ஈ.பி.டி.பி. போன்ற ஆயுதக்குழுக்களினது தாக்குதல்களைத் தடுக்க அரசாங்கம் தவறிவிட்டதென்று மேலும் தெரிவித்துள்ளது. (ச-5)

குளிரூட்டிய நவீன CAR வாடகைக்கு
திருமணம் (அலங்காரத்துடன்)
சுற்றுலா
விசேட வைபவங்கள்
போன்ற அனைத்து தேவைகளுக்கும் ஆங்கில இலக்கம் கொண்ட நவீன கார் சாரதியுடன் நியாயமான விலையில் உயர்ந்த சேவையுடன் பெற்றுக்கொள்ளலாம்
தொடர்பு:ரட்ணம்
சோமசுந்தரம் பாலர் பாடசாலை
22, சோமசுந்தரம் அவனியூ
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.
T.P.0777 903090
0777 246117

நிறைஞ்சனாஸ்
சங்கானை
மாதவன், நம்நதா நடித்த
கேட்டவரெல்லாம் பாடலாம்?
கா:நே: 10.30, 2.15, 5.30, 8.45

04.05.2006 முதல்
10.30,2.30,6.30,9.30
மாமனிதக் குரங்கொன்றின் நெஞ்சை உருக்கும் கதை கொண்ட சாகசச் சித்திரம்
பீட்டர் ஜக்ஷன்
கிங்கொங்
(KING KONG)
தங்கத்தமிழ் மொழியில். பாடசாலை மாணவர்களுக்கு விசேட சலுகை

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில 31.05.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.